# பொதுத்தமிழ் - அலகு III

## காவேரி தமிழ் உரை

## (மாணவர்களுக்காக....)

வடிவமைப்பு : முனைவர் ப. விஜயகுமார்


மதிப்புக்கல்வி புத்தகம்

(தமிழ் மற்றும் ஆங்கிலம்) – விலை ரூ. 65

நூல் தேவைப்படுவோர் தொடர்பு கொள்ள : 96773 56345


## நாட்டுப்புறப்பாடல்கள்

நாட்டுப்புறத்தில் இருக்கும் மக்கள் பாடிய பாடல்களே நாட்டுப்புறப் பாடல்கள். அப்பாடல்கள் அம்மக்களின் அக, புற வாழ்க்கையைக் காட்டும் கண்ணாடியாக விளங்குகின்றன. அப்பாடல்களில் அம்மக்களின் மொழிநடை, கற்பனை, வெளியீட்டுமுறை, இசை எனப் பல கூறுகள் அமைந்திருக்கும். நாட்டுப்புற இலக்கியங்களுள் தலைசிறந்தது நாட்டுப்புறப் பாடல்களே ஆகும். அப்பாடல்களைப் பாடப்படும் சூழல்களுக்கேற்ப தாலாட்டுப் பாடல், உழவுப் பாடல், நடவுப் பாடல், ஏற்றப் பாடல், வண்டிக்காரன் பாடல், கொண்டாட்டப் பாடல், கும்மி பாடல், பக்தி பாடல், ஒப்பாரிப் பாடல் என வகைப்படுத்துவர். இச்சுவைமிகு பாடல்களுள் தாலாட்டு, தொழில், ஒப்பாரி ஆகிய வகைகளிலிருந்து மூன்று பாடல்கள் பாடப்பகுதியாகத் தரப்பட்டுள்ளன.

### 1. தாலாட்டுப் பாடல் - மகன் பெருமை

ஆழங்காண முடியாத அன்புக் கடலான, ஒப்பிட்டுச் சொல்ல முடியாத உயர்ந்த கருணையான தாய்மையின் முதல் இலக்கிய வெளியீடுதான் தாலாட்டு. தாலாட்டு குழந்தைக்கு உறக்கம் ஊட்ட மட்டுமா பாடப்படுகிறது? தாயின் அன்பை, சேய் எப்படியெல்லாம் வளர்ந்து வாழவேண்டும் என்ற எதிர்பார்ப்பை, தந்தையின் வீரத்தை, தாய்வீட்டுச் சீதனப் பட்டியலை, கடவுள் குழந்தையைக் காக்க வேண்டும் என்ற வேண்டுதலை, இப்படித் தாயின் பல்வேறு எண்ணங்களை வெளிப்படுத்துவதாகத் தாலாட்டு முகிழ்க்கிறது. அழும் குழந்தையைத் தொட்டிலிட்டுத் தாலாட்டுகிற தாய், அதன் அழுகைக்கான காரணங்களை வினவி, அவளே விடைகளையும் சொல்லி ஆறுதலூட்டும் அறவுரையாக மலர்கிறது தாலாட்டு. சேலைத்

தொட்டிலில், கிராமத்துக் குழந்தைகள் கேட்கும் கீதத்தின் சிறப்பை, நாட்டுப்புறத் தாலாட்டின் மகிமையைச் சொல்ல வார்த்தைகள் போதாது. அனுபவித்தால்தான் அறியமுடியும்.

## பெருவினா

1. மகனின் பெருமைக் குறித்து தாய் கூறும் தாலாட்டுப்பாடலை தொகுத்து எழுதுக.

நீண்ட காலங்களாகக் குழந்தையின்றித் தவிக்கும் தாய் தனக்கு ஒரு குழந்தை பிறந்தவுடன் அக்குழந்தையைப் பலவிதமாகப் புகழ்ந்து பெருமையாக பேசித் தாலாட்டுகிறாள்.

உத்தமியாள் வாசலில் :

பட்ட மரம் பாலூறும்,
பாவல்காய் தேனூறும்,
உளித்தமரம் தான் தழையும்,
உத்தமியாள் வாசலிலே,

உத்தமியினுடைய வீட்டு வாசலில் பட்டுப்போன மரமும் தழைக்கும். காவற்காயும் கசக்காது இனிக்கும். உளுத்துப்போன மரமும் தழைத்து வளரும்.

கல் மூங்கில் :

வடக்கே ஒரு மூங்கில்
வளருதில்ல கல்மூங்கில்
வில்லுக்கு வில்லாகும்
விஜயனுக்கு அம்பாகும்
சொற் கேளா அர்ச்சுனர்க்கு
சுண்டு வில்லு அம்பாகும்

வடக்கே ஒரு மூங்கில் வளருதில்ல கல் மூங்கில், வில்லுக்கு வில்லாகும் விஜயனுக்கு அம்பாக மாறும். சோல் கேளாத அர்ஜீனனுக்கு கண்டு வில்லும் அம்பாகும்.

நீ தாமரையோ :

வடக்கே மழை பேஞ்சு
வாசலெல்லாம் தண்ணி
தண்ணி வந்த வாசலிலே-நீ
தங்கி வந்த தாமரையோ?

வடக்கே மழை பெய்து, வாசமெல்லாம் தண்ணீர், தண்ணீர், தண்ணீர் வந்த வாசமெல்லாம் நீ தங்கி வந்த தாமரையோ?

நல்ல தடம் பார்ப்பேன் :

வடக்கே மழை பேஞ்சு
வார்ந்த மணல் ஓடிவர
நடந்து போ பாலகனே-உன்

நல்ல தடம் நான் பார்க்க

மகனே நீ, வடக்கே மழை பெய்து வரிவரியாக மணல் ஓடிவர, நடந்து போ பாலகனே! நடந்து போன உன் நல்ல தடத்தினை நான் பார்த்து மகிழ்ந்து போக!

வாடையும் தென்றலும் :

வடக்கே ஒரு தாழை
வர்ணலட்சம் பூப்பூக்கும்
வாடை யடியாதோ
வரிசை மகன் கண்ணயர?
தெற்கு ஒரு தாழை
தென் லட்சம் பூப்பூக்கும்
தென்றல் அடியாதோ
செல்ல மகன் கண்ணயர?

வடக்கே ஒரு தாழை அழகான வண்ணத்திலே லட்சம் பூக்களைப் பூக்கும் வாடை(வாசனை) அடிக்காதோ! துன் சீருக்குரிய மகன் கண் உறங்கித்தூங்க தான் சீருக்குரிய மகன் கண் உறங்கித் தூங்க வாடை அடிக்காதோ?

தெற்கே ஒரு தாழை, தென்றல் மணம் கொண்டு என் செல்லமகன் கண் உறங்கித் தூங்க லட்சம் பூக்களைப் பூத்து தென்றல் காற்று அடிக்காதோ!

தூண்டி வலை போட்டார் :

வைகை பெருகிவர
வாளை மீன் துள்ளிவர
துள்ளி வந்த மீனுக் குல்ல-வேலவா
தூண்டி வலை போட்டாரே.

வைகையில் வெள்ளம் பெருக்கெடுத்து வர, வாளை மீன்கள் எல்லாம் துள்ளி வர, துள்ளி வந்த மீனுக்குள்ளே, வேலவனே, தூண்டில் வலை போட்டாரோ!

துன்பம் தீர்க்க வந்தவன் :

பத்து வருஷமா
பாலனில்லா வாசலிலே
கைவிளக்கு கொண்டு
கலி தீர்க்க வந்தவனோ?
விளக்கிலிட்ட எண்ணெய் போல
வெந்துருகி நிக்கயில
கலத்திலிட்ட பால்போல
கைக்குழந்தை தந்தாரே

பத்து வருஷமா பாலன் இல்லாத வாசலிலே கைவிளக்கு கொண்டு கசி(துன்பம்) தீர்க்க வந்தவனோ? விளக்கில் இட்ட எண்ணெய்போல வெந்து மனம் உருகி நின்றபொழுது பாத்திரத்தில்(கலம்) இட்ட பால் போலக் கைக்குழந்தையை இறைவன் தந்தாரோ!

பாதுகாக்க வந்தவள் :

மலடி மலடி என்று
மானிடர்கள் ஏசுகிறார்
மலட்டுக் குலமதையே-நீ
மறப்பிக்க வந்தவனோ?
மலடி புழுங்கலை - ரெண்டு
மான் வந்து திங்குதின்னு
மாதாளங்கம்பு வெட்டி-நீ
மான் விரட்ட வந்தவனோ?

மலடி, மலடி என்று ஊர்மக்கள் திட்டும்பொழுது மலட்டுக்குலம் என்பதையே மறக்கச் செய்ய வந்தவனோ? மலடி புழுங்கலை இரண்டு மான் வந்து தின்கிறது என்று மாதாளமிங்கம்பு வெட்டி நீ மான் விரட்ட வந்தவனோ?

கட்டழகன் கூந்தல் :

கொல்லையிலே தென்னை வச்சு
குறுத்தோல கொட்டாஞ் செஞ்சு
சீனி போட்டுத் திங்க
செல்வமே பிறந்தவனோ?
வில்வப் பொடி மணக்கும்
விரிச்ச தலைப் பூமணக்கும்
கதம்பப் பொடி மணக்கும்
கட்டழகன் கூந்தலிலே.

கொல்லையிலே தென்னைமரத்தை நட்டு வச்சு, அதிலிருந்து குருத்தோலையில கொட்டகை செய்து, சீனி போட்டுத் தின்பதற்குச் செல்வமே! பிறந்தவனோ நீ! கட்டழகன் கூந்தலிலே வில்வப்பொடி மணக்கும், விரிச்ச தலையிலே பூ மணக்கும், கதம்பப்பொடி மணக்கும்.

----

வட்டார வழக்கு : மணக்குதில்ல - மணக்கிறதல்லவா?; அழிச்சாரே - அழித்தாரே; வந்தடைஞ்ச - வந்தடைந்த; வச்சளக்க - வைத்தளக்க; பூ வெறங்கும் - பூ இறங்கும்; பேஞ்சு- பெய்து.

குறிப்பு : மலட்டாறு-திருவெண்ணெய் நல்லூர் அருகில் ஓடுவது, இவ்வாற்றில் நீரோடுவது அபூர்வம். தண்ணீர் ஓடாததைப் பொதுவாக இச்சொல் குறித்தது.

----

## 2. தொழில் பாடல் - எங்கும் நெல்

கிராமப்புறத்தில் உழைக்கும் மக்கள் தொழில் செய்கிறபோது களைப்புத் தெரியாமல் இருக்க, உடல்சோர்வை மறைக்க, உற்சாகத்துடன் பணிசெய்ய பல்வேறு பாடல்களைப் பாடுவர். இவற்றையே தொழிற்பாடல் என்பர். வேளாண்மை, மீன் பிடித்தல், பாரம் சுமத்தல், மரம் வெட்டுதல் என பல்வேறு தொழில் பாடல்களை நாட்டுப்புறப் பாடல்களில் காணமுடிகிறது. இப்பல்வேறு தொழில்களுள் வேளாண்மை முதன்மையான இடத்தைப் பெறுகிறது. அதுபோலவே வேளாண்மை சார்ந்த தொழில் பாடல்களும் நாட்டுப்புறப் பாடல்களுள் முதன்மையான இடத்தைப் பெறுகின்றன. வேளாண்மையைப் பொறுத்தவரை உழுதல், விதைத்தல், நாற்று நடுதல், களை எடுத்தல், ஏற்றம் இறைத்தல், அறுவடை செய்தல், களம் சேர்த்தல், களம் அடித்தல், பங்கிடுதல் எனப் பல படிநிலைகள் உள்ளன. வேளாண் தொழிலாளர்கள் ஒவ்வொரு படிநிலைக்கும் தனித்தனியான சில பாடல்களைப் பாடிக்கொண்டே வேலை செய்வார்கள். அவ்வாறான வேளாண்மைத் தொழிற்பாடல்களில் ஒன்றான நெற் களமடிக்கும் பாடல் ஒன்று பாடப்பகுதியாகத் தரப்பட்டுள்ளது.

### பெருவினா

1. ‘எங்கும் நெல்’ என்ற நாட்டுப்புற பாடலில் நெற்களமடிக்கும் காட்சியை விளக்குக.

வேளாண்மைத் தொழிற்பாடல்களில் ஒன்றான நெற் களமடிக்கும் பாடல் ஒன்று ‘எங்கும் நெல்’ என்ற தலைப்பில் நாட்டுப்புறப்பாடல் அமைந்துள்ளது.

களத்துக்குள்ளே காலைவைத்து - ஏலங்கிடி லேலோ
கிழட்டுமாடும் மிதிக்குதையா - ஏலங்கிடி லேலோ
கிழக்கத்திமா டெல்லாங்குடி - ஏலங்கிடி லேலோ
கீழேபார்த்து மிதிக்குதையா - ஏலங்கிடி லேலோ
மேற்கத்திமா டெல்லாங்குடி - ஏலங்கிடி லேலோ
மேலேபார்த்து மிதிக்குதையா - ஏலங்கிடி லேலோ
வடக்கத்திமா டெல்லாங்குடி - ஏலங்கிடி லேலோ
வாரிவாரி மிதிக்குதையா - ஏலங்கிடி லேலோ
தெற்கத்திமா டெல்லாங்குடி - ஏலங்கிடி லேலோ
திரட்டித் திரட்டி மிதிக்குதையா - ஏலங்கிடி லேலோ
நாட்டியக் குதிரைபோல - ஏலங்கிடி லேலோ
நாலுகாலில் மிதிக்குதையா - ஏலங்கிடி லேலோ
குள்ளமைாடும் புள்ளமைாடும் - ஏலங்கிடி லேலோ

குதிச்சுக்குதிச்சு மிதிக்குதையா - ஏலங்கிடி லேலோ
பால்கொடுக்கிற பசுவுங்கூட - ஏலங்கிடி லேலோ
பையப்பைய மிதிக்குதையா - ஏலங்கிடி லேலோ
பல்லுப்போடாத காளைக்கன்றும் - ஏலங்கிடி லேலோ
பால் மறந்த கிடாக்கன்றும் - ஏலங்கிடி லேலோ (1)

ஏலங்கிலேலோ, ஏலங்கிடிலேலோ(இசைக்குறிப்புச் சொற்கள் - சந்த நயத்திற்குரியவை) களத்திற்குள்ளே காலை வைத்து கிழட்டுமாடும் மிதிக்குதடா, கிழக்கத்தி மாடெல்லாம் கீழே பார்த்து மிதிக்குதையா! மேற்கத்தி மாடெல்லாம் மேலே பார்த்து மிதிக்குதையா? வடக்கத்தி மாடெல்லாம் வாரி வாரி மிதிக்குதையா! தெற்கத்தி மாடெல்லாம் திரட்டித்திரட்டி மிதிக்குதையா! ஏலங்கிடிலேலோ, ஏலங்கிடிலேலோ! நாட்டியமாடும் குதிரை போல நாலு காலில், நாலு காலிலே மிதிக்குதையா! குள்ளமாடும், புள்ளமாடும் குதிச்சுகுதிச்சு மிதிக்குதையா! பல்லு முளைக்காத காளைக்கன்றும், பால் மறந்த கிடாக்கன்றும் ஏலங்கிடிலேலோ!

பரந்துபரந்து மிதிக்குதையா - ஏலங்கிடி லேலோ
பரந்துபரந்து மிதிக்குதையா - ஏலங்கிடி லேலோ
எல்லாமாடும் சேர்ந்துதானும் - ஏலங்கிடி லேலோ
ஏகமாத்தான் மிதிக்குதையா - ஏலங்கிடி லேலோ
கால்படவும் கதிருபூரா - ஏலங்கிடி லேலோ
கழலுதையா மணிமணியா - ஏலங்கிடி லேலோ
நெல்லுவேறே வைக்கோல் வேறே - ஏலங்கிடி லேலோ
நல்லாஇருக்கு பார்க்கப்பார்க்க - ஏலங்கிடி லேலோ (2)

பரந்து பரந்து மிதிக்குதையா! பரந்து பரந்து மிதிக்குதையா ஏலங்கடிலேலோ! எல்லா மாடும் சேர்ந்து தான் ஏலங்கிடிலேலோ ஏகமாகத்தான் மிதிக்குதையா! கால்கட்டு கதிர்கள் எல்லாம் உதிருதையா, மணி மணியா உதிருதையா, ஏலங்கிடிலேலோ! ஏலங்கிடிலேலோ! நெல்லுவேரே, வைக்கோல் வேறே! ஏலங்கடிலேலோ! நல்லா இருக்கு பார்க்க பார்க்க! ஏலங்கிடிலேலோ!

வயிற்றுப்பசி மாட்டுக்கெல்லாம் - ஏலங்கிடி லேலோ
வைக்கோலோடே போகுதையா - ஏலங்கிடி லேலோ
ஆண்பிள்ளைக்கும் பெண்பிள்ளைக்கும் - ஏலங்கிடி லேலோ
ஆளுக்கொரு மரக்கால் நெல்லு - ஏலங்கிடி லேலோ
அலங்கன் அலங்கிரெண்டுபேருக்கும் - ஏலங்கிடி லேலோ
ஆறுமரக்கால் நெல்லுக் கூலி - ஏலங்கிடி லேலோ
வண்டிவண்டியா நெல்லுத்தானும் - ஏலங்கிடி லேலோ
வருகுதையா அரண்மனைக்கு - ஏலங்கிடி லேலோ
அரண்மனைக் களஞ்சியம்பார்க்க - ஏலங்கிடி லேலோ
ஆயிரங்கண் வேணுமையா - ஏலங்கிடி லேலோ (3)

மாட்டுக்கெல்லாம் வயிற்றுப்பசி, வைக்கோலோடே போகுதையா, ஏலங்கிடிலேலோ! ஏலங்கிடிலேலோ! வயிற்றுப்பசி, மாட்டுக்கெல்லாம் ஏலங்கிடிலேலோ! வைக்கோலேடா போகுதையா ஏலங்கிடிலேலோ! ஆளுக்கொரு மரக்கால்(அளவு) நெல்லு ஏலங்கிடிலேலோ! ஆலங்கன் அலங்கி ரெண்டு பேருக்கும் ஏலங்கிடிலேலோ! ஆறு மரக்கால்(அளவு) நெல்லு கூலியாக கிடைத்ததோ ஏலங்கிடிலேலோ! ஏலங்கிடிலேலோ! வண்டி வண்டியா நெல்லு தானும் அரண்மனைக்கு வருகுதையா! ஏலங்கிடிலேலோ! ஏலங்கிடிலேலோ! அரண்மனைக் களஞ்சியம் பார்க்க ஆயிரம் கண்கள் வேண்டும்மைய்யா! ஏலங்கிடிலேலோ!

வெள்ளைசெவ்வா வேளையிலே - ஏலங்கிடி லேலோ
வேகுதையா காய்கறியும் - ஏலங்கிடி லேலோ
கும்பல்கும்பலா நெல்லுத்தானும் - ஏலங்கிடி லேலோ
குலுமையெல்லாம் நிறைக்குதையா - ஏலங்கிடி லேலோ
தப்புநெல்லும் தவறுநெல்லும் - ஏலங்கிடி லேலோ
தாராளமாக் கெடக்குதையா - ஏலங்கிடி லேலோ
கூனற்கிழவி கூடைமுறத்தை - ஏலங்கிடி லேலோ
கூனிக்கூனிக் கொண்டு போறாள் - ஏலங்கிடி லேலோ
கூட்டிப் பொறுக்கிக் கூடையை ரொப்பி - ஏலங்கிடி லேலோ
வீட்டுக்குப் போறா வேடிக்கையாதான் - ஏலங்கிடி லேலோ
சந்துபொந்தெல்லாம் நெல்லுக்கிடக்கு - ஏலங்கிடி லேலோ
சாக்கடையெல்லாம் நெல்லுக்கிடக்கு - ஏலங்கிடி லேலோ
வயலெல்லாம் நெல்லுக்கிடக்கு - ஏலங்கிடி லேலோ
வழியெல்லாம் நெல்லுக்கிடக்கு - ஏலங்கிடி லேலோ (4)

புழுங்கல் நெல்லினைக் குத்தி பிள்ளைகளுக்குக் சோறா வேருதையா! ஏலங்கிடிலேலோ! வெள்ளி, செவ்வாய் வேளையிலே காய்கறியுமோட சேர்ந்து வேகுதையா! ஏலங்கிடிலேலோ! ஏலங்கிடிலேலோ! கும்பல் கும்பலா நெல்லு தானும் குளுமை எல்லாம் நிறைக்குதையா, ஏலங்கிடிலேலோ! ஏலங்கிடிலேலோ! தப்பு நெல்லும் தவறு நெல்லும் ஏலங்கிடிலேலோ! தாராளமாக கெடக்குதையா ஏலங்கிடிலேலோ! ஏலங்கிடிலேலோ! கூட்டிப் பொறுக்கிக் கூடையை நிரப்பி ஏலங்கிடிலேலோ! வீட்டுக்குப் போறா வேடிக்கையாதான் ஏலங்கிடிலேலோ! ஏலங்கிடிலேலோ! சந்துபொந்தெல்லாாம் நெல்லு கிடக்கு, சாக்கடை எல்லாம் நெல்லு கிடக்கு ஏலங்கிடிலேலோ! ஏலங்கிடிலேலோ! வயலெல்லாம் நெல்லு கிடக்கு - ஏலங்கிடிலேலோ! வழியெல்லாம் நெல்லு கிடக்கு - ஏலங்கிடிலேலோ!

## 3. ஒப்பாரிப்பாடல் - சீட்டைப் பறித்தானோ?

தாய்மையின் முதல் இலக்கிய வெளியீடு தாலாட்டென்றால் அதே தாய்மையின் இறுதி இலக்கிய வெளிப்பாடுதான் ஒப்பாரி. இழப்பைத் தாங்க இயலாதபோது சோக உணர்ச்சிகளின் தொகுப்பாக ஒப்பாரி எழுகிறது. இறப்புத் துன்பத்தை வெளிப்படுத்துவதில் கூட கலைநயத்தைக் கண்டவர்கள் தமிழர்கள். தந்தையின் இறப்பின் போது மகளும், மகள், மகன் இறப்பின் போது தாயும், உடன் பிறந்தோர் இறந்தபோது சகோதரியும் ஒப்பாரிப் பாடல்களில் சோகத்தைக் கரைக்க முயல்வதைக் காணமுடிகிறது. அப்பாடல்கள் சோக உணர்ச்சிகளை அற்புதமான நயத்துடன், இசையுடன் வெளிப்படுத்தி நிற்கின்றன. அதேநேரத்தில் தாங்க முடியாத துயரம் தங்குதடையின்றி ஒப்பாரிப் பாடல்களில் வழிந்தோடுகிறது. அது அவர்களின் உணர்ச்சிகளுக்கு வடிகாலாகவும் அமைகிறது.

மனைவியும் கணவனும் செல்வத்தில் திளைத்து இன்ப வாழ்க்கை நடத்தினர். அவர்கள் பொருளுக்குச் சேதம் வராமல் அரண்மனையாரும், கும்பினியாரும் காவல் முறை செய்தனர். ஆனால் உயிரைக் கொள்ளை கொண்டு போக வந்த கால தூதரிடமிருந்து அவள் கணவனை காப்பாற்ற முடியவில்லை. அச்சோகத்தைப் பின்வரும் பாடல் வெளிப்படுத்துகின்றது.

### சிறுவினா

1. ‘சீட்டைப் பறித்தானோ!’ என்ற ஒப்பாரிப்பாடல் உணர்த்தும் பெண்ணின் துயரக் காட்சியினை எடுத்துரைக்க.

மனைவியும் கணவனும் செல்வத்தில் திளைத்து இன்ப வாழ்க்கை நடத்தினர். அவர்கள் பொருளுக்குச் சேதம் வராமல் அரண்மனையாரும், கும்பினியாரும் காவல் முறை செய்தனர். ஆனால் உயிரைக் கொள்ளை கொண்டு போக வந்த கால தூதரிடமிருந்து அவள் கணவனை காப்பாற்ற முடியவில்லை. அச்சோகத்தை வெளிப்படுத்தும் விதமாக ‘சீட்டைப் பறித்தானே!’ என்ற தலைப்பில் இடம்பெறும் நாட்டுப்புற பாடலின் கருத்தினை காண்போம்.

வெள்ளிச் சுருணை வரும்
விதமான நெல்லு வரும்
விதமான நெல் அவிக்க
மேகத்துத் தண்ணி வரும்
தங்கச் சுருணை வரும்
தனிச் சம்பா நெல்லு வரும்
தனிச்சம்பா நெல்லவிக்க
தந்தி மேல் தண்ணி வரும் !
அல்லியும் கொய்யாவும்-அரமணையில்

அலுங்கப் பழுத்திருக்க
அசையாம காலுவைக்க
அரமணையார் காவலுண்டு (1)

வெள்ளிச் சுரணை வரும் விதமான நெல்லுவரும். விதம் விதமான நெல்லினை அவிக்க மேகத்திலிருந்து தண்ணீர் வரும். தங்கச் சுருணை வரும். தனித்தனியே சம்பாநெல்லு வரும். தனிச்சம்பா நெல் அவிக்க தந்தி மேல் தண்ணீர் வரும்(எமதூதர்) அல்லியும் கொய்யாவும் அரண்மனையிலே நல்லா பழுத்திருக்க அசையாம காலு வைக்க அரமணையார் காவலுண்டு.

கொய்யாவும் பிலாவும்
குலையாய் பழுத்திருக்க
கூசாமல் காலு வைக்க
கும்பினியார் காவலுண்டு
அடிக்க வந்த தூதுவரை
அடியாள் சரணமின்னேன்.
கொல்ல வந்த தூதுவரை
கோடி சரணமின்னேன்
காலை ரயிலேறி
கல்கத்தா போயிறங்கி
காசப் பறிச்சானோ
கைவிலங்கு போட்டானோ
சிகப்பு ரயிலேறி
சீமைக்கே போயிறங்கி,
சீட்டப் பறிச்சானோ?
சிறுவிலங்கு போட்டானோ (2)

கொய்யாவும், பலாவும் குலை குலையாய்ப் பழுத்திருக்க, கூசாமல் காலு வைக்க, கும்பினியார் காவல் உண்டு. அடிக்க வந்த தூதுவரை அடியாளே சரணமென்று கூறினேன். கொல்ல வந்த தூதுவரை கோடி சரணமென்று கூறினேன். காலைப் பொழுதிலே ரயிலேறி, கல்கத்தா போய் இறங்கி, காசப் பறிச்சானோ, கைவிலங்கு போட்டானோ! சிகப்பு ரயிலேறி சீமைக்கே போயிறங்கி சீட்டப்பறிச்சானோ? சிறு விலங்கு போட்டானோ!

---

வட்டார வழக்கு: தந்திமேல் தண்ணி-அவசரமாக ; தூதுவர்-எமதூதர்.

----

# புதுக்கவிதைகள்

19ம் நூற்றாண்டு வரை தமிழ் இலக்கிய வடிவம் என்பது செய்யுள் வடிவமாகவே இருந்தது. இந்நூற்றாண்டில் மேலைநாட்டில் பழைய யாப்பு உருவத்தில் இருந்து விலகி, இயைபுத்தொடை முதலியன இன்றி உரைநடைச் சாயலில் புதிய கவிஞர்கள் கவிதை படைக்கத் தொடங்கினர். 1892ல் அமெரிக்கக் கவிஞர் வால்ட் விட்மன் புல்லின் இதழ்கள் என்ற தலைப்பில் வெளியிட்ட 12 கவிதைகளைக் கொண்ட தொகுப்பு, யாப்பு மரபைப் புறக்கணித்து ஃப்ரீவெர்ஸ் என்னும் வசன கவிதையாக அமைந்தது.

பாரதியார் தொடங்கிப் புதுக்கவிதைக் கவிஞர் பலர் நல்ல பல படைப்புகளை நல்கியுள்ளனர். 1. பாரதியார் – வசன கவிதை 2. ந. பிச்சமூர்த்தி – காட்டுவாத்து 3. அப்துல் ரகுமான் - பால்வீதி, சுட்டுவிரல் 4. வாலி – அவதார புருஷன் 5. மீரா – கனவுகள் + கற்பனைகள் = காகிதங்கள் 6. நா. காமரராசன் - கறுப்பு மலர்கள் 7. மு.மேத்தா – கண்ணீர்ப்பூக்கள், ஊர்வலம் 8. வைரமுத்து - இன்னொரு தேசியகீதம், திருத்தி எழுதிய தீர்ப்புகள் 9. சிற்பி – சர்ப்ப யாகம் 10. அறிவுமதி – நட்புக்காலம் என்பன ஆகும்.

புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் என்பது வல்லியக்கண்ணன் எழுதியது. புதுக்கவிதை போக்கும் நோக்கும் என்னும் நூல் ந. சுப்புரெட்டியாரால் எழுதப்பட்டது. புதுக்கவிதை – ஒரு புதுப்பார்வை என்பது கவிஞர் பாலாவின் படைப்பு ஆகும்.

## 1. அப்துல் ரகுமான் - வெற்றி

‘கவிக்கோ’ என்னும் அடைமொழியால் அறியப்படுபவர். வானம்பாடி இயக்கக் கவிஞர். மேனாட்டுக் கவிதை வடிவங்கள் பலவற்றையும் தமிழுக்கு அறிமுகம் செய்தவர். ‘நேயர் விருப்பம்’, ‘சொந்தச் சிறைகள்’, ‘சுட்டுவிரல்’, ‘பால்வீதி’, ‘கரைகளே நதியாவதில்லை’, ‘அவளுக்கு நிலா என்று பெயர்’, ‘மின்மினிகளால் ஒரு கடிதம்’, ‘ஆலாபனை’, ‘பித்தன்’, ‘விதைபோல் விழுந்தவன்’, ‘முத்தமிழின் முகவரி’ என்று நீளும் இவரது நூல் வரிசை தமிழில் தனியொரு கவியுலகை உருவாக்கிக் கொண்டு உள்ளது. ‘ஆலாபனை’ என்னும் வசன கவிதை நூலுக்காக சாகித்ய அகாதெமி விருது பெற்றுள்ளார். வாணியப்பாடி இஸ்லாமியக் கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றியவர். தமிழ்நாட்டின் கலீல் ஜிப்ரான் என்று கண்ணதாசனால் பாராட்டப் பெற்றவர்.

## பெருவினா

1. ‘வெற்றி’ என்ற கவிதையில் அப்துல் ரகுமான் குறிப்பிடும் கருத்துக்களை எடுத்துரைக்க.

கவிஞர் அப்துல் ரகுமான் தமது ‘வெற்றி’ என்ற கவிதையில் தோல்வியால் மனிதர்கள் துவண்டுவிடக் கூடாது என்பதை உணர்த்துகிறார்.

என் பத்தினி :

என் தோல்வியே! நீ வாழ்க
நீ என் பத்தினி
உன்னைச் சொந்தம் கொண்டாட
வேறு யாரும்
வர மாட்டார்கள் அல்லவா?

என் கண்ணாடி :

தோல்வியே! நீ என் கண்ணாடி
என்னையே நான் பார்த்துக்கொள்ள
உதவுவது நீயல்லவா?

பரிணாமச் சிற்பி :

தோல்வியே! நீ பரிணாமச் சிற்பி
மனிதனைச் செதுக்குவது
நீயல்லவா?

உலைக்களம் :

தோல்வியே! நீ ஓர் உலைக்களம்
வாழ்க்கைப் போராட்டத்திற்கு
ஆயுதங்கள் தயாரித்துத் தருவது
நீயல்லவா?

நேச நெருப்பு :

தோல்வியே! நீ ஒரு நேச நெருப்பு
எங்களைப் புடம் போட்டு
ஒளிரச் செய்வது
நீயல்லவா?

சாணைக்கல் :

தோல்வியே! நீ ஒரு சாணைக்கல்
எங்களைக் கூராக்குவது
நீயல்லவா?

பள்ளிகூடம் :

தோல்வியே! நீதான்
உண்மையான பள்ளிக்கூடம்
நான் புயலையே
படகாகக் கற்றுக் கொண்டது
உன்னிடமல்லவா?

ஞானகுரு :

தோல்வியே! நீ ஞானகுரு
அகந்தையை அடக்குவது
நீயல்லவா?
தோல்வியே! நீ தருவன
புண்கள் அல்ல
கண்கள்.

புல்லாங்குழல் :

தோல்வியே!
நீ சுட்டுத் துளைத்தால் அல்லவா
நான் புல்லாங்குழல் ஆனேன்.

இழப்பல்ல :

தோல்வியே! நீ இழப்பல்ல
உன்னால்தான் நாம்
நம்மை அடைகிறோம்
வெற்றியோ ஒரு போதை
அதில்தான்
நாம் நம்மை இழக்கிறோம்.

சம்பாதிக்கும் பணம் :

தோல்வியே! நீதான்
நாம் சம்பாதிக்கும் பணம்
வெற்றியைக் கூட
அதனால்
வாங்க முடியும்.

என் தோல்வியே! நீ வாழ்க! நீ என் பத்தினி(மனைவி) உன்னைச் சொந்தம் கொண்டாட வேறு யாரும் வர மாட்டார்கள் அல்லவா?

தோல்வியே! நீ என் கண்ணாடி. என்னையே நான் பார்த்துக் கொள்ள உதவியும் செய்வது நீயல்லவா!

தோல்வியே! நீ பரிணாமச் சிற்பி(வளர்ச்சிக்கான சிற்பி – என்னையே செதுக்குகின்றாய்) மனிதனைச் செதுக்கி உருவாக்குவது தோல்வியே நீதானே!

தோல்வியே! நீ ஓர் உலைக்களாம்(ஆயுதப்பட்டறை) வாழ்க்கை என்னும் போராட்டத்திற்கு ஆயுதங்களை (கருவிகளை) தயாரித்துத் தருவது நீ அல்லவா?

தோல்வியே! நீ ஒரு தேச நெருப்பு. எங்களை நெருப்பிலிட்டுப் பக்குவப்படுத்தி ஒளிரும்படியாக செய்வது நீ அல்லவா!

தோல்வியே! நீ ஒரு சாணைக்கல். எங்களைக் கூர்மைப்படுத்துவது நீ அல்லவா!

தோல்வியே! நீ தான் உண்மையான பள்ளிக்கூடம். (கற்றுத் தருவது நீயல்லவா) நான் புயலையே படகாக மாற்றிக் கொள்ளும் வலிமையைக் கற்றுக் கொண்டது உன்னிடமே அல்லவா!

தோல்வியே! நீ ஞானகுரு. என்னுடைய அகத்தை அடக்குவது நீ அல்லவா! தோல்வியே நீ தருவது புண்கள் அல்ல. விழிப்பதற்கான கண்கள்.

தோல்வியே! நீ துளையாக்கும் வகையில் சுட்டுத் துளைத்தால் மட்டுமே நான் புல்லாங்குழல் ஆனேன்.

தோல்வியே! நீ இழப்பு அல்ல. உன்னால்தான் நாங்கள் எங்களை அடைகிறோம். வெற்றியோ ஒரு போதை. அதில் தான் நாம் நம்மை இழக்கிறோம்.

தோல்வியோ! நீ தான் நான் சம்பாதிக்கும் பணம். வெற்றியைக் கூட அதனால் வாங்க முடியும்.

இவ்வாறாக கவிஞர் ‘தோல்வியே வெற்றிக்கு அறிகுறி’ என்ற கருத்தை இக்கவிதையின் மூலம் விளக்கியுள்ளார்.

## 2. அரங்க மல்லிகா - அக்குளுக்கு அல்ல இடைத்துண்டு

அரங்க மல்லிகா காவிரிக் கரையோர திருவானைக் காவலில் இருந்து தமிழ் இலக்கியப் பரப்புக்குள் நுழைந்தவர். ‘தமிழ் இலக்கியமும் பெண்ணியமும்’, ‘பெண்ணியக் குரல் அதிர்வும் தலித் பெண்ணிய உடல் மொழியும்’ ஆகிய நூல்களை எழுத்தியுள்ளார். ‘நீர் கிழிக்கும் மீன்’ என்னும் நூல் இவரது முதல் கவிதைத் தொகுப்பாகும். சென்னை எத்திராஜ் மகளிர் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார். ‘பெண்ணியக் கவிதைகளின் அரசியல்’ என்பதில் தனிக்கவனம் கொண்டு எழுதிவரும் இவரது கவிதைகள் இந்த மண்ணின் அடையாளத்தைத் தற்காலக் கவிதை மொழியில் பேசுபவை.

## பெருவினா

1. ‘அக்குளுக்கு அல்ல இடைத்துண்டு’ என்ற கவிதை அரங்க மல்லிகா எடுத்துரைக்கும் கருத்துக்களை பதிவிடுக.

கவிஞர் அரங்க மல்லிகா தன் கவிதையான ‘அக்குளுக்கு அல்ல இடைத்துண்டு’ என்ற கவிதை மூலம் உழவர்களின் வாழ்வியலை எடுத்துரைக்கின்றார்.

சிவந்தெழும் கதிரவன் வருகை
பசுங்கதிர் வயலில் தடம்பதித்தல்
இரண்டும் எப்படி இரு
கோடுகளாய்?

புல்நுனியின் பனித்துளி
வரப்புகளில் கட்டை விரல் பதிக்க
இதயநோய் இல்லாமல் போகும்

வரப்பைத் தாண்டும்
போதெல்லாம்
சாரையும் நாகமும்
உன் நிழல்பட்டு ஒதுங்கும்

பண்ணையை உதைக்கத்
திராணியற்று
உழவுமாட்டை அடித்தது
உள்ளத்தைக் கிள்ளும்

சுட்டெரிக்கும் கதிரில்
வயிறு ஒட்டி சுருண்டு
கடைக்கோடி வயலுக்காய்
கடைமடை நீர்த்தேக்கியதும்
வாரிசுக்கதை கூறும்

உலக இயக்கம்
உன் கால் சேற்றிலும்
கை மண்வெட்டியிலும்
பதித்தபோதுதான்

அதிகார கலப்பையெடுக்காமல்

ஆதிக்க வயலை உழாமல்

பிறகு எதற்கு

'ஐயா?' என அலறி

இடைத்துண்டை

அக்குளில் இடுக்க!

சிவப்பு நிறத்தோடு எழும் கதிரவனின் வருகை, பசுமையான கதிர்களில் வயலில் தம் தடத்தினைப் பதித்தால் இரண்டும் எப்படி இரு கோடுகளாய்ச் சங்கமிக்கும்.

புல் நுனியின் மேலே பனித்துளி வயல்வரம்புகளில் கட்டை விரல் (தம் பதிவினை) பதிக்க காணுகின்றவர்களுக்கு இதயநோய் என்பது இல்லாது போகும்.

வயல்வரப்புகளைத் தாண்டும்பொழுது சாரைப் பாம்பும் நாகப்பாம்பும் உன் நிழலைக் கண்டு ஒதுங்கிப் போய்விடும்.

பண்ணைக்காரனை உதைக்க பலமின்றி உழவு மாட்டை அடிப்பது மனதை வருத்தும். சுட்டெரிக்கின்ற வெயிலில் வயிறு ஒட்டி சுருண்டு கிடக்கும் உழவன் கடைக்கோடியிலுள்ள வயலுக்கு மடை திறந்து நீரினைத் தேக்கிய உடன் வாரிசுக்கதை கூறும்.

உலக இயக்கம் உன் கால்சேற்றிலும் (உழவன்) கை, மண் வண்டியிலும் பதித்தப் பொழுதுதான், அதிகார கலப்பையை தடுக்காமல், ஆதிக்க வயலினை உழாமல் உழவன் பிறகு எதற்கு ஐயா? என அலறி இடைத்துண்டை அக்குளில் இடுக்கிக் கொள்வான்.

அதிகாரத்திற்குரியவன் அதிகார மற்றும் அதிகார மற்றவன் அதிகாரம் கொண்டு விளங்கும் உழவனின் பரிதாப நிலையும் இயற்கையின் மனம் கவர் காட்சிகளையும் இக்கவிதை பதிவாக்கி உள்ளது.

## 3. அறிவுமதி – நட்புக்காலம்

அறிவுமதி விருத்தாசலம் அருகிலுள்ள கீனனூரில் பிறந்தவர். அண்ணாமலைப் பல்கலைக்கழத்தில் தமிழ்ப் பயின்றவர். முற்போக்குக் கவிஞராகத் திகழ்பவர். கிளிக்கு எதற்குக் கழுகின் சிறகுகள் என்று கேட்டுக்கொண்டே திரைத்துறைக்குள் நுழைந்து ஆங்கிலக் கலப்பு இல்லாமல் பாடல்கள் எழுதியவர். பின் திறைத்துறையின் போக்கு கண்டு மனம் ஒப்பாமல் அதனைவிட்டு விலகியவர். 'நிரந்தர மனிதர்கள்', 'என் பிரிய வசந்தமே', 'அணுத்திமிர் அடக்கு', 'கடைசி மணித்துளி', 'வலி' போன்ற இவரின் கவிதை நூல்கள் புகழ்பெற்றவை. எழுத்துப்பணிக்காக தம்மை முழுமையாக ஒப்படைத்துக் கொண்டவர். ஆண் பெண் நட்பு குறித்து அவர் எழுதியுள்ள நட்புக்காலம் எனும் நூலில் பாலியல் உணர்வு கடந்த ஆண் பெண் நட்பை அழகாக விளக்கியுள்ளார்.

## பெருவினா

1. ‘நட்புக்காலம்’ கவிதை மூலம் அறிவுமதி எடுத்துரைக்கும் கருத்துக்களை எழுதுக.

கவிஞர் அறிவுமதி தம் ‘நட்புக்காலம்’ கவிதையில் பாலின வேறுபாடு தாண்டி ஆணும், பெண்ணும் நட்புக் கொண்டு இருப்பதை பதிவுச் செய்து உள்ளார்.

நிச்சயிக்கப்பட்ட நண்பன் :

அம்மா அப்பாவிடம் அறிமுகப்படுத்த
முதன்முதலாக என்னை நீ
உனது வீட்டிற்கு அழைத்துச்
சென்றிருந்த போது
வழக்கமான அம்மாக்களின்
சந்தேகத்தையொத்த பரிமாறலுக்கு
நடுவே...
“எப்போதும் இவன் உன்
மருமகனாக முடியாது
ஏனெனில்
இவன் என்
நிச்சயிக்கப்பட்ட நண்பன்”
உன் குரல்
இப்போதும் கேட்கிறது
எனக்குள்
....................... (1)

உன் அம்மா அப்பாவிடம் என்னை அறிமுகப் படுதத, உன் வீட்டிற்கு என்னை அழைத்துச் சென்றபொழுது வழக்கமான அம்மாக்களின் சந்தேகத்தோடு வரவேற்று உபசரிக்கின்ற பொழுதே, ‘எப்பொழுதும் இவன் உன் மருமகனாக முடியாது. ஏனெனில் இவன் என் நிச்சயிக்கப்பட்ட நண்பன்’ என்று நீ கூறியது, அந்தக்குரல் இப்பொழுதும் எனக்குள்ளே கேட்கின்றது.

நண்பர்கள் :

பேருந்து நிறுத்தத்திற்குச்
சற்றுத் தள்ளிநின்று
பேசுகிறவர்கள்
காதலர்கள்
நிறுத்தத்திலேயே
நின்று
பேசுகிறவர்கள்

நண்பர்கள்

....................... (2)

பேருந்து நிறுத்தத்திற்குச் சற்றுத் தள்ளி நின்று பேசுகிறவர்கள் காதலர்கள், நிறுத்தத்திலேயே நின்று பேசுகிறவர்கள் நண்பர்கள்.

நட்பாக இருப்பதே நட்பு :

நண்பர்கள் என்றவர்கள் காதலர்களாயிருக்கிறார்கள்
எனக்குத் தெரிய அண்ணன் தங்கை என்று ஆரம்பித்தவர்களே
கணவன் மனைவியாகவும் ஆகியிருக்கிறார்கள்
ஆனாலும் சொல்கிறேன்
நட்பு என்பது நம்மைப்போல் என்றும்
நட்பாகவே இருப்பதுதான்

..................... (3)

நண்பர்கள் என்று கூறியவர்கள் காதலர்களாக ஆயிருக்கிறார்கள். ஏனக்குத் தெரிய அண்ணன் தங்கை என்று ஆரம்பித்தவர்களே கணவன் மனைவியாகவும் ஆகியிருக்கின்றார்கள். ஆனாலும் சொல்கிறேன் நட்பு என்பது நம்மைப்போல் என்றும் நட்பாகவே இருப்பது தான்.

காதலனுக்குக் கையசைத்தாய் :

ஒரு நள்ளிரவில்
கதவு தட்டும் ஒலிகேட்டு
வந்து திறந்தேன்
காதலனோடு
கைபிடித்தபடி
சோர்ந்த முகத்தோடு
நின்றாய்
போய் வருகிறேன்
அடுத்த வாரம் சந்திக்கலாம்
என்று புறப்பட்ட
காதலனுக்குக் கையசைத்தாய்
என் தோளில்
சாய்ந்தபடி (4)

ஒரு நள்ளிரவில் கதவு தட்டும் ஒலி கேட்டு வந்து திறந்தேன். காதலனோடு கைபிடித்தபடி சோர்வான முகத்தோடு நின்றாய். ‘போய் வருகிறேன்’, அடுத்தவாரம் சந்திக்கலாம் என்று புறப்பட காதலனுக்கு என் தோளில் சாய்ந்தபடி கையசைத்தாய்.

## 4. ஆண்டாள் பிரியதர்ஷினி – நிலாச்சோறு

நெல்லை மாவட்டத்தைச் சார்ந்தவர். சென்னை சாரதா வித்யாலயாவில் பள்ளிப் படிப்பும், எத்திராஜ் கல்லூரியில் முதுகலைப் பட்டமும், அண்ணா பல்கலைக்கழகத்தில் இளம் முனைவர் பட்டமும் பெற்றவர். ஆங்கில இலக்கியத்திலும் தமிழ் இலக்கியத்திலும் சிறப்புத் தகுதியோடு தேறியவர்.

'சுயம் பேசும் கிளி', 'தோகையெல்லாம் துப்பாக்கிகள்' (மரபுக்கவிதை), 'முத்தங்கள் தீர்ந்துவிட்டன', 'புதிய திருப்பாவை' போன்ற புதுக்கவிதைத் தொகுப்புகள் எழுதியுள்ளார். பல உயரிய இலக்கிய விருதுகளைப் பெற்றவர். 11 டிசம்பர் 2003 குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் அவர்களின் தலைமையில் புதுதில்லியில் கவியரங்கத்தில் பங்கேற்று பாராட்டுகளைப் பெற்றவர். குவிதைத் துறையில் மட்டுமன்றி உரைநடை இலக்கியத்துறையிலும் வெற்றிப் படைப்புகளைத் தந்தவர். இடுகாட்டில் பணிசெய்யும் விளிம்புநிலை மக்களைப் பற்றிய இவரது 'தகனம்' நாவல் பல்வேறு பரிசுகளைப் பெற்ற படைப்பாகும்.

திரைப்படப்பாடல்களும் கதை வசனமும் எழுதி வருகிறார். பெண்ணியவாதி நிலை கடந்து மனிதநேயவாதி என்னும் தளம் புகுந்து சிந்திப்பவர். 'நிலாச்சோறு' எனும் இக்கவிதை 'சுயம் பேசும் கிளி' எனும் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.

### சிறுவினா

1. 'நிலாச்சோறு' என்ற ஆண்டாள் பிரியதர்ஷினியின் கவிதையில் அறியலாகும் கருத்துக்களை எழுதுக.

கவிஞர் ஆண்டாள் பிரியதர்ஷி தன் 'நிலாச்சோறு' கவிதையில் சித்ரா பௌர்ணமி நிலவின் மகிழ்ச்சியையும், ஏக்கத்தையும் புலப்படுத்தி உள்ளார்.

பரிசாய் அளிக்கும் :

ஒவ்வொரு மாதமும்
எட்டிப் பார்க்கும்
இன்றா? அடுத்ததா?
புரியாமல் விழிக்கும்
முன்பெல்லாம்
ரெண்டு நாளைக்கு முன்பே
ஆற்றில் முகம் பார்த்துப்
பொட்டு வைத்துக் கொள்ளும்
காற்றுக்குச் சந்தனம் பூசும்

பலூன் பீப்பி ரிப்பன்
சவ்வு மிட்டாய் வாட்சு
சாமி படம் கதம்பம் குமரிகள்
வயசுக்கேற்ற வேடிக்கையை
வேடிக்கை பார்க்கும்
ஆற்றையும் மணலையும் அளையும்
எட்டு ஊரு கும்பலுக்கும்
வருஷக் களிப்பைப்
பரிசாய் அளிக்கும் (1)

ஒவ்வொரு மாதமும் எட்டிப் பார்க்கும் நிலா இன்றா? அடுத்ததா? என்று புரியாமல் விழிக்கும். முன்பு எல்லாம் இரண்டு நாளைக்கு முன்பே ஆற்றில் முகம் பார்த்து பொட்டு வைத்துக் கொள்ளும். காற்றுக்குச் சந்தனம் பூசும். பலூன், பீப்பீ, ரிப்பன், சவ்வு மிட்டாய், வாட்சு, சாமி படம், கதம்பம், குமரிகள், வயசுக்கேற்ற வேடிக்கையை வேடிக்கை வேடிக்கை பார்க்கும். ஆற்றலையும் மணலையும் அலையும் எட்டு ஊறும் கும்பலுக்கும் வருடத்திற்குரிய களிப்பினை(மகிழ்வை) பரிசாய்த் தரும்.

நிலாச்சோறு :

வில்லுப்பாட்டு
கூத்து கரகாட்டம்
சாமி புறப்பாடு பார்த்து
விடியல் வரைக்கும்
தூக்கம் தொலைக்கும்
கூட்டாஞ்சோறு
கம்பந் தொவையல்
கல்லுத் தோசை
காற்றுக்குச்
சோறு கொண்டு போகும்
சாமி புறப்பாட்டைவிட
அம்மன் தரிசனத்துக்கு
ஆலாய்ப் பறக்கும் கூட்டம் (2)

வில்லுப்பாட்டு, கரகம், கூத்து, சாமிழ புறப்பாடு பார்த்து விடியல் வரைக்கும் தூக்கம் தொலைக்கும். கூட்டாஞ்சோறு, கம்பந் தொளவயல், கல்லுத்தோசை எனக் காற்றுக்கும் சோறு கொண்டு போகும். சாமி புறப்பாட்டை விட அம்மன் தரிசனத்திற்குக் கூட்டம் ஆவலாய் பறக்கும்.

வீட்டுச்சிறை :

இன்றா? அடுத்ததா?
எல்லா பௌர்ணமியும் ஒன்றா?
“கரகாட்டம் போர்...
ஒளியும் ஒலியும் பார்க்கணும்லே....”
தெருக்கூத்து மறந்து
வீட்டுக் கூத்து
“சட்டுப் புட்டுன்னு
தின்னு முடி மூதி.
கேபிள் டி.வில
ரஜினி படம் போடுதாஹ...
ராத்திரி கண்ணு முழிக்கணும்....”
சொல்லுப் பாட்டோடு
வீட்டுச் சிறையில்
கண் நிலைகுத்தி
சவ அடக்கம் (3)

இன்றா? அடுத்ததா? எல்லா பௌர்ணமியும் ஒன்றா? கரகாட்டம் சலித்துவிட்டது. ஒளியும் ஒலியும் பார்க்கணும்லே என்று மாறிப் போனது. தெருக்கூத்து மறந்து வீட்டுக் கூத்தானது, சட்டுப்புட்டுன்னு தின்னு முடி மூதி, கேபில் டிவியில் ரஜினிபடம் போடுதாவ... ராத்திரி கண்ணு முழிக்கணும் என்று வீட்டுச் சிறையிலேயே தொலைக்காட்சிப் பெட்டியிலே கண்கள் நிலை குத்தி மக்கள் அனைவரும் சவ அடக்கம்.

தனி நிலா :

முகம் பார்க்க
ஆற்றையே காணோம்
மணல் என்ன கண்ணாடியா?
இன்றைக்கு சித்ரா பௌர்ணமி
நிலா மட்டும் தனியாக...! (4)

முகம் பார்க்க ஆற்றையும் காணோம். மணல் என்ன கண்ணாடியா? இன்றைக்கு சித்ரா பௌர்ணமி. நிலா மட்டும் தனியாக இருக்கிறது.

# 5. ஈரோடு தமிழன்பன் - மறைக்க இடம் தேடும் மனம்

ஈரோடு தமிழன்பன் ஆசிரியர், மரபுக் கவிஞர், கவியரங்கக் கவிஞர், புதுக்கவிதைக் கவிஞர், சிறுகதை ஆசிரியர், புதின ஆசிரியர், நாடக ஆசிரியர், சிறுவர் இலக்கியப் படைப்பாளி, வாழ்க்கை வரலாற்றாசிரியர், திறனாய்வாளர், கட்டுரையாளர், ஓவியர், சொற்பொழிவாளர், திரைப்பட இயக்குநர், திரைப்படப் பாடலாசிரியர், எனப் பன்முகப்பட்ட ஆளுமைகளைக் கொண்டிருப்பவர். தமிழின் பெருமையெனக் கருதப்படும் மரபுக் கவிதைகளாக இருந்தாலும் சரி, ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுத் தமிழில் புகழுடன் விளங்கும் ஹைக்கூ எனப்படும் கவிதை வடிவமாக இருந்தாலும் எல்லாவற்றிலும் மிகவும் தேர்ச்சி பெற்றவர். இவர் சாகித்ய அகாடமி விருது பெற்ற கவிஞர், ஈரோடு தமிழன்பன் ஆவார்.

## சிறுவினா

1. கவிஞர் ஈரோடு தமிழன்பனின் ‘மறைக்க இடம் தேடும் மனம்’ கவிதையில் இடம்பெறும் மனித மனம் குறித்து எழுது.

கவிஞர் ஈரோடு தமிழன்பன் தன் ‘மறைக்க இடம் தேடும் மனம்’ கவிதையில் பிரபஞ்சத்தின் அழகை வியந்து குறிப்பிட்டுள்ளார்.

திறந்தபடி
இருக்கும் பிரபஞ்சம்
தேடல்களுக்கு
மூடுவதில்லை கதவை.

காற்று
மனத்தில் இருப்பதை
மலர்களிடம் சொல்ல
மறுப்பதில்லை.

தடைகளால்
உடைபடாமல் கடலின்
இரகசியங்களை
அம்பலப்படுத்தும்
அலைகள்.

பதுங்கிய

விதையின் அந்தரங்கத்தைப்
பச்சையாய்
வெளியிட்டுவிடுகிறது
மண்.

வாய் திறக்கா விட்டாலும்
எரிமலையின்
இதயம்
என்ன வென்று தெரிந்து விடுகிறது.

எல்லாவற்றையும்
மறைத்து விட்டுத்
தன்னை மறைக்க இடம் தேடித்
தவிக்கும் மனம்
மனிதனிடம் மட்டும்தான்.

பிரபஞ்சம் திறந்தபடி இருக்கும். தேடல்களுக்குக் கதவினை மூடுவது இல்லை.

காற்று தன் மனதில் இருப்பதை மலர்களிடம் சொல்ல மறுப்பதும் இல்லை.

அலைகள் தடைகளால் உடைபடாமல் கடலின் இரகசியங்களை அம்பலப்படுத்தும்.

மண் தான் பதுக்கிய விதைகளின் அந்தரங்கத்தைப் பச்சையாய் வெளியிட்டு விடுகிறது.

வாய் திறக்காவிட்டாலும் எரிமலையின் இதயம் என்ன என்று தெரிந்து விடுகிறது.

எல்லாவற்றையும் மறைத்து விட்டுத் தன்னை மறக்க இடம் தேடித் தவிக்கும் மனம் மனிதனிடம் மட்டுமே தான் உள்ளது.

## 6. சிற்பி - ஓடு சங்கிலி ஓடு

கோவை மாவட்டம் ஆத்துப் பொள்ளாச்சியில் பிறந்தவர். இவரது இயற்பெயர் பாலசுப்பிரமணியம். பாரதியார் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறைத் தலைவராகப் பணியாற்றியவர். வானம்பாடி இயக்கக் கவிஞர். பாரதியின் எழுத்து எனக்கு வேதம் என்று இவர் கூறுவதிலிருந்து இவரது கவிமுகம் காணலாம். மலையாளத்திலிருந்து தமிழுக்குப் பல மொழிபெயர்ப்புகள் தந்துள்ளார். அறிவியல் செய்திகளைப் புதுக்கவிதையில் எழுவதில் வல்லவர்.

'ஒரு கிராமத்து நதி' என்னும் நூலுக்குச் சாகித்ய அகாதெமி விருது பெற்றவர். 'சூரியநிழல்', 'சர்ப்பயாகம்', 'புன்னகை பூக்கும் பூனைகள்', 'மௌன மயக்கம்' ஆகியவை இவர் எழுதிய சிறந்த கவிதை நூல்களாகும். தமிழ்க்கவிதை புனைவு முயற்சியில் அரை நூற்றாண்டுக்கும் மேலாக ஆழ்ந்த ஈடுபாடு காட்டி வருபவர்.

சிற்பியின் படைப்புக்கலை, சிற்பியின் படைப்புலகம், சிற்பியின் கவிதை வளம், சிற்பியின் கருத்தியல் வளம், கோபுரத்தில் ஒரு குயில் போன்ற தனி நூல்கள் வெளியாகியுள்ளன. தற்போது **"Sirpi Poet as Sculptor"** என்ற விமர்சன நூலை புதுச்சேரி பல்கலைக்கழக ஆங்கிலத்துறையின் முன்னாள் தலைமைப் பேராசிரியர் டாக்டர் மருதநாயகம் எழுதியுள்ளார்.

## பெருவினா

### 1. கவிஞர் சிற்பியின் 'ஓடு சங்கிலி ஓடு' என்ற கவிதையில் இடம்பெறும் அம்மாவின் அன்பு, ஆளுமையை எடுத்துரைக்க.

அம்மாவின் மனஉறுதி, தோற்றம், பண்புநலன்கள், அவளது செயல்பாடுகள் என பல்வேறு பரிணாமங்களை கவிஞர் சிற்பி எடுத்துரைத்து உள்ள 'ஓடு சங்கிலி ஓடு' கவிதைவழி இனி காண்போம்.

அம்மா ஒரு ஓவியம் :

அழித்து எழுதமுடியாத
சித்திரம் ஒன்றுண்டு -
அம்மா.
எப்போதும் பெண்களெனில்
இளக்காரம் ஆண்களுக்கு
"காயம் பட்டாக்கூட
ரத்தம் வர்ரதில்லே
டாக்டர்கிட்ட அவளெக்
காட்டுங்கடா..."
அம்மாவைப் பற்றி
அங்கலாய்த்த அப்பா
காணாது போன
பேரன் திருமணமும்
கொள்ளுப்பேத்தி வரவும்
பிடிவாதமாய்ப் பார்த்துப்
போனவள் அம்மா (1)

ஓவியத்தில் திருத்தம் வேண்டினால் அழித்துவிட்டு மாற்றம் தரலாம். ஆனால் அழித்து எழுத முடியாத சித்திரம் ஒன்று உண்டு எனில் அது 'அம்மா'வைக் கூறலாம். ஒரு ஓவியம்போல நம்மை மகிழ வைப்பவள் அம்மா. பொதுவாக எப்பொழுதும் பெண்கள் என்றால் பலவீனம் உடையவள் என்னும் கருத்து ஆண்களுக்கு உண்டு. இதற்கு அப்பாவும் விதிவிலக்கல்ல.

அம்மாவுக்குக் காயம் பட்டாக்கூட இரத்தம் வெளிவரவில்லை. அதனால்தான் அம்மாவின் உடல் பலவீனமாக உள்ளது என்பது அப்பாவின் எண்ணம். மருத்துவரிடம் அழைத்துப்போய் அம்மாவைப் பரிசோதிக்க அப்பா கூறினார். ஆனால் அப்பாதான் சீக்கிரம் இறந்து போனார். அம்மாவோ, அப்பா காணாத பேத்தியின் திருமணம் மற்றும் அந்தப் பேத்தி பெற்ற மகளின் கொள்ளுப்பேத்தி பிறப்பு என மேலும் ஒரு தலைமுறையைப் பார்த்த பிறகே இறந்தாள்.

அம்மாவின் தோற்றம் :

தாமிர முகம்
கொங்குக் கொண்டை
வெற்றிலைக் கறைபடிந்த
'ஏந்து பல்'
சிவப்பு மேனி மறைக்கும்
பின் கொசுவக்
கைத்தறிச் சேலையும்
'அங்கிங்கெனாதபடி'
குத்தி வைத்த பச்சையும். (2)

அம்மாவின் முகம் தாமிரம்போல பளபளக்கும். கொங்குக் கொண்டையும் வெற்றிலைக் கறைபடிந்த ஏந்துபல் மற்றும் சிவப்பு மேனி மறைக்கும் பின் கொசுவம் வைத்துக் கட்டும் கைத்தறிச் சேலையும், எல்லா இடங்களிலும் குத்தி வைத்த பச்சையும் ஆகிய தோற்றம் கொண்டவள் அம்மா.

சைவக்காரி :

பட்டுப் புடவையில்
அம்மாவைப் பார்த்ததே இல்லை
அப்பா எடுத்துக் கொடுக்க
இல்லையோ என்னவோ...
நேசிப்புக்கு எடுத்த ஜென்மம்
கறி தின்னும் அப்பாவுக்குக்
கை கூசாமல் சமைத்தளிக்கும்
கடும் சைவக்காரி (3)

பட்டுப்புடவையை அணிந்து என்றைக்கும் அம்மாவைப் பார்த்தது இல்லை. அப்பா வாங்கிக் கொடுத்ததே இல்லையோ என்னவோ! கறி தின்னும் அப்பாவிற்குக் கை கூசாமல் சமைத்துத் தரும் கடும் சைவக்காரி.

ஓலைக்குடிசை :

நேசிப்பு... நேசிப்பு
புருசனைப் போலவே
பண்ணையத்தையும்

குழந்தைகளைப் போலவே
எருமைகளையும்!
உறவுகளைப் போலவே
அக்கம் பக்கத்தையும்.
ஓலைக்குடிசை -
மாளிகை பேதங்கள்
கைப் பக்குவத்தைக்
கடுகளவும் மாற்றவில்லை
கூட்டுச் சாற்றிலும்
வெறும் மிளகு ரசத்திலும்
அதே சுவை... அதே... மணம்
மேதினியில் அதுபோல
ஏது இனி? (4)

நேசிப்பு... நேசிப்பு... கணவனைப் போலவே பண்ணையையும், குழந்தைகளைப் போலவே எருமைகளையும், உறவுகளைப் போலவே அக்கம் பக்கத்தையும், ஓலைக்குடிசை, மாளிகை பேதங்கள் என எதுவுமற்று அனைத்தையும் நேசிப்பவள். கைப்பக்குவத்தையும் கடுகளவும் மாற்றமில்லை. கூட்டுச்சாற்றிலும், வெறும் மிளகு ரசத்திலும் அதே சுவை... அதே... மணம். இந்த உலகத்தில் அதுபோல ஏது இனி?

ஊக்குவிக்கும் பண்பு :

ஊரையே தூக்கும்
அப்பாவின் கோபத்தை
ஒற்றைப் பார்வையால்
செதுக்கி ஊமையாக்குவாள்
எழுபது வயதிலும்
மூத்தவரைக் கண்டால்
தலைகுனிந்து நிலம் கீறும்
அம்மா ஓர் அதிசயம்
மட்டும் மரியாதையுயும்
கொட்டிய களஞ்சியம்
ஒற்றையடிப் பாதையில்
நடக்கச் சலித்த குழந்தையை
முன்னால் நடத்தி
“ஓடு ஓடு சங்கிலி
ஓடோடு...
காலை மிதிப்பேன்

கையை மிதிப்பேன்
ஓடு ஓடு சங்கிலி
ஓடு ஓடு…”
என்று பாடித் துரத்துவாள்
அம்மா.
சோர்வு சூழும்பொழுது
இன்றும் அம்மாவின் குரல்
“ஓடு ஓடு சங்கிலி
ஓடோடு…” **(5)**

ஊரையே தன் கோபத்தால் அடக்கும் அப்பாவைத் தன் ஒற்றைப் பார்வையால் செதுக்கி ஊமை ஆக்குகின்றவள். எழுபது வயதிலும் மூத்தவரைக் கண்டால் தலை குனிந்து நிலம் கீறும் அம்மா ஓர் அதிசயம். மரியாதைத் தன்னுள் கொட்டி வைத்திருக்கும் களஞ்சியம். ஒற்றையடிப் பாதையில் நடக்கச் சலித்த குழந்தையை முன்னால் நடத்தி, ஓடு, ஓடு சங்கலி ஓடோடு… காலை மிதிப்பேன்… கையை மிதிப்பேன்… ஓடு ஓடு சங்கிலி… என்று பாடித் துரத்துவாள் அம்மா. சோர்வு ஏற்படும் பொழுது இன்றும் அம்மாவின் குரல் ஓடு ஓடு சங்கலி… ஓடோடு… கேட்டுக் கொண்டே இருக்கிறது.

## 7. தாமரை – தீர்ப்பு

கோயமுத்தூரில் பிறந்தவர். பொறியாளருக்குப் படித்து கவிஞராகவும் கதாசிரியராகவும் எழுத்துலகில் தடம் பதித்து, பாடலாசிரியராகத் திரையுலகில் மனம் பரப்பி வருபவர். மாணவப் பருவத்திலேயே கதைகள், கவிதைகள் எழுதி ஏடுகளில் இடம் பிடிக்கத் தொடங்கி விட்டவர். கோவையில் ஒரு தனியார் தொழிற்கூடத்தில் தரக்கட்டுப்பாட்டுப் பொறியாளராய்ப் பணி செய்தவர். எழுத்துக்குத் தன்னை முழுமையாகத் தந்து கொள்வதற்கென வேலையைத் துறந்தவர். கவிதை, சிறுகதை, கட்டுரை என்று பல தளங்களிலும் பரிசுகள் வென்றவர். சிறந்த பெண்ணியச் சிந்தனையாளர். துமிழகத்துப் பெண்ணியக் கவிஞர்களுள் குறிப்பிடத்தக்கவர். இவரின் முதல் கவிதைத் தொகுப்பான ‘ஒரு கதவும் கொஞ்சம் கள்ளிப் பாலும்’ என்னும் நூலிலிருந்து ‘தீர்ப்பு’ என்னும் கவிதை நம் பாடப் பகுதியாக இடம் பெறுகிறது.

## சிறுவினா

### 1. கவிஞர் தாமரையின் ‘தீர்ப்பு’ கவிதை உணர்த்தும் பட்டிமன்ற விவாதக் கருத்துகளை எழுது.

தமிழகத்தில் பல இடங்களில் சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் பெண்களான கண்ணகி, மாதவி குறித்து கற்பில் சிறந்தவள் கண்ணகியா! மாதவியா! என விவாதங்கள் நடைபெற்றதை கவிஞர் தாமரை ‘தீர்ப்பு’ கவிதை வழி உணர்த்தி உள்ளார்.

கண்ணகி கட்சி :

பட்டி மன்றத்திலே விவாதம்
பொறி பறந்தது
கற்பில் சிறந்தவள்
கண்ணகியா? மாதவியா?
நூற்றாண்டுகள் ஓடியும்
மக்களுக்கு சந்தேகம்
தீரவில்லை
அனல் கக்கும் பேச்சாளர்கள்
இருதரப்பிலும்...
ஒருவரும் சளைத்தவரில்லை
கணவன் உயிர்போனாலும்
மதுரையை எரித்து
கற்பை நிரூபித்தாள் கண்ணகி
கற்பு இல்லையேல்
பற்றி எரியுமா
மதுரை மாநகரம்?
ஆணித்தரமாய்க் கேட்டது
கண்ணகி கட்சி.

பட்டிமன்றம் நடைபெற்று கொண்டு இருந்தது. இருதரப்புப் பேச்சாளர்களும் விவாதம் செய்தனர். அவர்களின் பேச்சில் அனல் பொறி பறந்தது. தலைப்பு ‘கற்பில் சிறந்தவள் கண்ணகியா? மாதவியா என்பதே ஆகும். சிலப்பதிகாரம் கதை எழுதப்பட்டு பல நூற்றாண்டுகள் ஓடியும் மக்களுக்கு சந்தேகம் தீரவே இல்லை. கணவன் உயிர் போனாலும் மதுரையை எரித்து கற்பை நிரூபித்தவள் கண்ணகி. கற்பு இல்லையேல் மதுரை மாநகரம் தீக்கு இரையாகுமா? ஆணித் தரமாய்க் கேட்பது கண்ணகி கட்சி.

மாதவி கட்சி :

'சூழ்நிலையை சுகமாய்
மறந்து போனீர்களே?'
- மறுத்துப் பேசியது
மாதவி கட்சி
'குலத்தொழிலுக்கு நடுவே
கற்பிழக்க வாய்ப்பு அதிகம்
அத்தனைக்கும் இடையே
அசராமல் காத்த
மாதவியே சிறந்தவள்'
அமைதியாய்க் கேட்ட நடுவர்

சூழ்நிலையைச் சுகமாய் மறந்து போனீர்களே என்று மறுத்துப் பேசியது மாதவி கட்சி. குலத் தொழிலுக்கு நடுவே கற்பிழக்க வாய்ப்பு அதிகம். அத்தனைக்கும் இடையே அசராமல் காத்த மாதவியே சிறந்தவள். நடுவர் அமைதியாய்க் கேட்டார்.

தீர்ப்பு :

அழுத்தமாய்ச் சொன்னார்
தீர்ப்பு...
'சந்தேகம் இல்லை
இருவருமே கற்பில்
சிறந்தவர்கள்தாம்...
கற்பிழந்தவன் கோவலனே!'

நடுவர் இருதரப்பு வாதங்களையும் அப்படியே ஏற்றுக் கொண்டார். தீர்ப்பினை அழுத்தமாய்ச் சொன்னார். இரு பெண்களும் கற்பில் சிறந்தவர்கள். இருவருக்கும் உண்மையாய் இல்லாதவன் கோவலன். எனவே கற்பிழந்தவன் கோவலனே என்று நடுவர் தம் தீர்ப்பை வழங்கினார்.

# 8. மீரா - தலைகுனிவு

"பிறந்ததுதான் பிறந்தேன் நான் பெண்ணாய்ப் பிறந்தேனா?" என்று கவிதை பாடிய கவிஞர் மீ.ராசேந்திரனின் முதல் இரு எழுத்துக்களின் இணைப்பிலிருந்து தான் கவிஞர் மீரா என்னும் பெயர் பிறந்தது. 10.10.1938இல் தோன்றி 01.09.2002இல் மறைந்த சிவகங்கைச் சீமையின் கவிதைக் குயில். "மாதா, பிதா, குரு, தெய்வம் என்பார்கள். இலக்குமி அம்மாவும், எஸ்.மீனாட்சிசுந்தரமும் என் மாதா பிதாக்கள். புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் என் குரு. மகாகவி பாரதி என் தெய்வம். என் குருவின் மூலமே என் தெய்வத்தை தரிசித்தேன். பாரதிதாசனின் தாசனான நான், மற்றும் ஒரு பாரதிதாசனானேன்" என்று குறிப்பிடும் மீரா, எழுத்துக்கும் வாழ்வுக்கும் இடையில் எந்தத் தடையுமின்றி குறிக்கோளுடன் வாழ்ந்து சிறந்தவர். அண்ணா, பாரதிதாசன், கண்ணதாசன், மு.வ. ஆகியோர் எழுத்துக்களில் ஏற்பட்ட ஈர்ப்பால் எழுத வந்த மீரா தொடக்கத்தில் மரபுக் கவிதைகள் எழுதியவர்.

வசனகவிதை தந்த பாரதிக்குப் பின்னர் புதுக் கவிதையின் தந்தையாய்த் திகழ்ந்த ந.பிச்சமூர்த்திக்குப் பிறகுவந்த கவிஞர்களில் குறிப்பிடத்தக்கவர் மீரா. திராவிடச் சிந்தனையில் அரும்பிப் பொதுவுடமைத் தத்துவத்தில் பூத்துக் குலுங்கிய, கவிதை நந்தவனம்.

## சிறுவினா

1. கவிஞர் மீரா தன் 'தலைகுனிவு' கவிதையில் வெளிப்படுத்தும் கருத்துகளை எழுதுக.

பாரதச் செல்வனும்
அந்நியச் சிறுவனும்
தத்தம்
தேசப் பெருமை
பேச லானார்...
"எங்கள் நாட்டில்
நாய்கள் பற்பல
குட்டிகள் போடும்..."

"எங்கள் நாட்டில்
மட்டும் என்னவாம்?"

"எங்கள் நாட்டில்

பன்றிகள் பற்பல

குட்டிகள் போடும்...”

“ஆச்சரியம் இதில்

என்னவாம்...

அங்கும் அப்படியே!”

“எங்கள் நாட்டில்

கட்சிகள் பற்பல

குட்டிகள் போடும்”

அந்நியச் சிறுவன்

அமைதி யாகத்

தலையைக் கீழே

தொங்கப் போட்டான்.

பாரத நாட்டுச் செல்வனும் வெளிநாட்டுச் சிறுவனும் தங்கள் தேசத்தின் பெருமைகளைக் குறித்து பேச ஆரம்பித்தனர்.

முதல் சிறுவன் எங்கள் நாட்டில் நாய்கள் பற்பல குட்டிகள் போடும் என்றான். மற்றொரு சிறுவன் எங்கள் நாட்டும் மட்டும் என்னவாம்? என்றான்.

முதல் சிறுவன் எங்கள் நாட்டில் பன்றிகள் பற்பல குட்டிகள் போடும் என்றான். வெளிநாட்டுச் சிறுவன் கூறிவனும் இதில் ஆச்சரியம்? அங்கும் அப்படியே என்றான். பாரத நாட்டுச் சிறுவன் கூறினான்.

எங்கள் நாட்டில் கட்சிகள் பற்பல. குட்டிகள் போடும் என்றான். வெளிநாட்டுச் சிறுவன் அமைதியாகத் தலையைக் கீழே தொங்கவிட்டான்.

## 9. மு.மேத்தா – வெளிச்சம் வெளியே இல்லை

மு.மேத்தா அவர்கள் திண்டுக்கல் மாவட்டம் பெரியகுளத்தைச் சார்ந்தவர். மதுரை தியாகராயர் கல்லூரியில் தமிழ்ப் பயின்று சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். வானம்பாடிக் கவிஞர்களுள் ஒருவராக இருந்து தமிழ்க் கவிதையை வளப்படுத்தியவர். இவரது ‘கண்ணீர்ப் பூக்கள்’ கவிதைத் தொகுப்பு இலக்கிய உலகில் தடம் பதித்த சாதனை நூலாகும். இவரது ‘ஆகாயத்திற்கு அடுத்த வீடு’ எனும் கவிதை நூல் சாகித்ய அகாதெமி விருது பெற்றது. இவர் திரையிசைக் கவிஞராகவும் கால் பதித்த பெருமைக்குரியவர்.

## பெருவினா

1. மனித வாழ்வில் நம்பிக்கையே தேவை என்பதை ‘வெளிச்சம் வெளியே இல்லை’ என்ற கவிதை மூலம் கவிஞர் மு. மேத்தா குறிப்பிடும் கருத்துகள் யாவை?

கவிஞர் மு.மேத்தா அவர்கள் தமது ‘வெளிச்சம் வெளியே இல்லை’ என்ற கவிதையில் நம்பிக்கை மனிதனின் நண்பனாகவும், கவலை, விரக்தி, பயம் என்ற பல்வேறு கருத்துகளை முன்வைத்து இக்கவிதையை அமைத்துள்ளார்.

நம்பிக்கை வெகு நேரமாய் :

வீட்டுக்கு வெளியே
ஓர் ஓரமாய்த்
தயங்கித் தயங்கி
உட்கார்ந்திருக்கிறது
நம்பிக்கை
வெகு நேரமாய்!
கவலையும் பயமும்
என்னைக்
கட்டிப் பிடித்துக்கொண்டு
கட்டிலில்
என்னுடன்.
சாயங்காலத்துக்
காற்றுப் போல்
உரிமையோடு
உள்ளே நுழையும்
சலனம்.
விரக்தி -
ஒரு போர்வையாய்
என் தலை முதல்
கால்வரை
போர்த்தியிருக்கும்.
வீட்டுக்கு வெளியே
ஓர் ஓரமாய்த்
தயங்கித் தயங்கி
உட்கார்ந்திருக்கிறது
நம்பிக்கை
வெகு நேரமாய்! (1)

நம்பிக்கையானது வெகு நேரமாய் வீட்டுக்கு வெளியே ஓர் ஓரமாய்த் தயங்கித் தயங்கி உட்கார்ந்திருக்கிறது. கவலையும் பயமும் என்னைக் கட்டிலில் கட்டிப் பிடித்துக் கொண்டது. சலனம் சாயங்காலத்துக் காற்றுபோல் உரிமையோடு உள்ளே நுழைந்தது. விரக்தி ஒரு போர்வையாய் என் தலை முதல் கால் வரை போர்த்திருக்கும். நம்பிக்கை வீட்டுக்கு வெளியே ஓர் ஓரமாய்த் தயங்கித் தயங்கி வெகுநேரமாய் உட்கார்ந்திருக்கிறது.

இடத்தை காலிச்செய் :

நம்பிக்கையிடம்
சலனமும் பெரு மூச்சும்
சண்டை பிடிக்க
பயம் ஓடிச்சென்று
பரிகாசம் செய்கிறது:
“ஐயன்மீர் யாரோ?
ஓ...
பழைய நண்பரா?
பார்வையாளர் நேரம்
முடிந்துவிட்டது...
பயனெதுவும் இல்லை.
போவீர்... வருவீர்
போய் வருவீர்!”
வேக வேகமாய்
வந்த
விரக்தி
விரட்டுகிறது:
“அவசியம்
பார்க்க வேண்டுமென்று
அடம் பிடிக்காதே.
அவரோ -
நூறு வகையான
நோய்களில்
நொந்து போய்ப்
படுத்த படுக்கையில்
படுபாடு படுகிறார்.
இன்றோ நாளையோ
அவர்
இறந்த பிறகு

தந்தி கொடுக்கிறோம்
தாராளமாய் வா.
இப்போது உடனே
இடத்தைக் காலிசெய்!" (2)

நம்பிக்கையிடம் சலனமும் பெருமூச்சும் சண்டை பிடிக்க, பயம் ஓடிச் சென்று பரிகாசம் செய்தது. ஐயன்மீர் யாரோ? ஓ பழைய நண்பா? பார்வையாளர் நேரம் முடிந்துவிட்டது பயன் எதுவும் இல்லை. போய் விடுங்கள், போய்விடுங்கள், வேகமாய் வந்த விரக்தி நம்பிக்கையை விரட்டியது. ஆவசியம் பார்க்க வேண்டுமென்று அடம் பிடிக்காதே. அவரோ நூறு வகையான நோய்களில் நொந்து போய் படுத்த படுக்கையில் பாடுபட்டுக் கொண்டிருக்கிறார். இன்றோ? நாளையோ? அவர் இறந்த பிறகு தந்தி கொடுக்கிறோம். தாராளமாய் வா! இப்போது உடனே இடத்தினைக் காலி செய்! என்று சலனமும் விரக்தியும் பயமும் பெருமூச்சும் கூறின.

நம்பிக்கையின் முழக்கம் :

நகரா திருக்கும்
நம்பிக்கை
மோதும் குரலில்
முழக்கமிடுகிறது.
"உள்ளே நுழைவதைத்
தடுக்கிறீர்கள்...
எனது
உரத்த குரலினை
என்ன செய்வீர்கள்?"
பயமும் கவலையும்
பஞ்சினைத் தேடின...
என்
காதுகளை அடைக்கக்
கனத்த முயற்சிகள்...
குறுக்கீடுகளைத்
தாண்டி
நம்பிக்கை
குரல் கொடுக்கிறது :
"தோழனே!
ஓ! என் தோழனே!
நான் தான் உனது
நம்பிக்கை நண்பன்.
சுதந்திரக் கொடியின்

சுடரொளியாக
உச்சிக் கம்பத்தில்
உயரப் பறந்த நீ
ஏன் இப்போது
அரைக் கம்பத்தில்
இறங்கி
அழத் தொடங்குகிறாய்?
அவிழ்க்க முடியாமல்
உன்னை
அவதிப் படுத்தும்
விரக்தியின் முடிச்சுகளை
வெட்டி எறி!
உன்னுடைய
புண்களின் மீது
புன்னகையைத் தடவு!
எதிர் காலத்தை
எழுதுவதற்கு
உன்
மனதில் பட்ட
காயங்களில்
மை தொட்டுக் கொள்!
போர்வைகளில்
ஏன் இப்படிப்
புதைந்து கிடக்கிறாய்?
விழித்து நீ
எழுந்தால்
விலங்குகளே நொறுங்கும்!
சின்ன நூல்கண்டா
உன்னைச்
சிறைப்படுத்தி வைப்பது?”
நம்பிக்கையின்
வார்த்தை மின்சாரம்
நரம்புகளில் பாய்ந்து
உறக்கத்தைக்
கலைத்து

உசுப்பிவிட
விரக்திப் போர்வையை
வீசி எறிந்தேன் -
கவலை பயங்களை
ஓரத்தில் விழும்படி
உதறி எழுந்தேன்
தடைகளை மீறித்
தாழ்ப்பாள் திறந்து
அருமை நண்பனை
உள்ளே
அழைத்தேன்! (3)

நகராதிருக்கும் நம்பிக்கை மோதும் குரலில் முழக்கமிடுகிறது. உள்ளே நுழைவதைத் தடுக்கிறீர்கள். எனது உரத்த குரலினை என்ன செய்வீர்கள். உடனே பயமும் கவலையும் தம் காதுகளை அடைக்க பஞ்சினைத் தேடின. கனத்த முயற்சிகள், குறுக்கீடுகளைத் தாண்டி நம்பிக்கை குரல் கொடுக்கிறது.

தோழனே! ஓ! என் தோழனே! நான் தான் உனது நம்பிக்கை நண்பன். சுதந்திரக் கொடியின் சுடரொளியாக உச்சிக் கம்பத்தில் உயரப் பறந்த நீ ஏன் இப்பொழுது அரைக் கம்பத்தில் இறங்கி அழத் தொடங்குகிறாய்? அவிழ்க்க முடியாமல் உன்னை அவதிப்படுத்தும் விரக்தியின் முடிச்சுகளை வெட்டி எறி. உன்னுடைய புண்களின்மீது புன்னகையைத் தடவு. எதிர்காலத்தை எழுதுவதற்கு உன் மனதில் பட்ட காயங்களில் மையினைத் தொட்டுக் கொள்.

போர்வைக்குள் ஏன் இப்படிப் புதைந்து கிடக்கிறாய்! விழித்து நீ எழுந்தால், விலங்குகளே நொறுங்கும். சின்ன நூல்கண்டா உன்னைச் சிறைப்படுத்தி வைப்பது? நம்பிக்கையின் வார்த்தை மின்சாரம் நரம்புகளில் பாய்ந்து, உறக்கத்தைக் கலைத்து உசுப்பிவிட்டது. விரக்திப் போர்வையை வீசி எறிந்தேன். குவலை, பயங்களை ஓரத்தில் விழும்படி உதறி எழுந்தேன். துடைகளை மீறித் தாழ்ப்பாள் திறந்து அருமை நண்பனை உள்ளே அழைத்தேன்.

விரக்தி வெளியேறியது :

நானும்
நம்பிக்கையும்
கை குலுக்கிக் கொண்டு
நாற்காலிகளில்
அருகருகே
அமர்ந்திருக்க
எடுபிடி வேலை
செய்யத் துவங்கின
இதுவரை என்னை

ஏவிக்கொண்டிருந்த
கவலையும் பயமும்.
தேநீர் கொண்டுவந்து
மேசையில் வைத்து
“சர்க்கரை போதுமா
சார்?” என்று கேட்டன.
சலனம்-
பெருமூச்சோடு
காலிக் கோப்பைகளை
எடுத்துச் சென்று
கழுவி வைத்தது...
விரக்தி மட்டும்
ஒரு கௌரவமான
வில்லன் போல்
விடைபெற்றுக் கொண்டு
வெளியேறியது! (4)

நானும் நம்பிக்கையும் கை குலுக்கிக் கொண்டு நாற்காலிகளில் அருகருகே அமர்ந்திருக்க, இதுவரை என்னை ஏவிக் கொண்டிருந்த கவலையும், பயமும் எடுபிடி வேலை செய்யத் துவங்கின. தேநீர் கொண்டு வந்து மேசையில் வைத்து, சர்க்கரை போதுமா சார்? என்று கேட்டன. சலனம் பெருமூச்சோடு காலிக்கோப்பைகளை எடுத்துச் சென்று கழுவி வைத்தது. விரக்தி மட்டும் ஒரு கௌரமான வில்லனைப்போல் விடைப்பெற்று கொண்டு வெளியேறியது.

இவ்வாறாக கவிஞர் இக்கவிதையில் நம்பிக்கையின் துணை கொண்டு வாழ்வில் வெளிச்சம் பெறலாம் என்பதை உணர்த்தியுள்ளார்.

## 10. வைரமுத்து – ருசி

தேனி மாவட்டம் வடுகப்பட்டி என்ற சிற்றூரில் பிறந்தவர். சென்னை பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்ப் பயின்றவர். திரையிசைக் கவிஞரான இவர், சிறந்த பாடலுக்கான தேசிய விருதை நான்குமுறை பெற்றுள்ளார். தனது ‘வைகறை மேகங்கள்’ என்ற நூல் வாயிலாக தமிழ் உலகிற்கு அறிமுகமானார். ‘பெய்யெனப் பெய்யும் மழை’, ‘இன்னொரு தேசிய கீதம்’, ‘கொடி மரத்தின் வேர்கள்’, ‘இந்தப் பூக்கள் விற்பனைக்கல்ல’, ‘சிகரங்களை நோக்கி’, ‘தண்ணீர் தேசம்’, ‘இந்தக் குளத்தில் கல் எறிந்தவர்கள்’, போன்றவை இவரது நூல்களில் குறிப்பிடத்தக்கவை. பாரதியின் வரலாற்றை புதுக்கவிதை வடிவில் ‘கவிராஜன் கதை’ என்ற தலைப்பில் எழுதியுள்ளார். ‘கள்ளிக்காட்டு இதிகாசம்’ என்ற நாவலுக்கு சாகித்திய அகாதெமி

விருது கிடைத்துள்ளது. ‘கருவாச்சி காவியம்’, கவித்துவமும் உரைத்தன்மையும் கலந்த புதிய காப்பியப் படைப்பாகச் சிறந்து விளங்குகிறது.

## பெருவினா

1. கவிஞர் வைரமுத்தின் ‘ருசி’ கவிதை உணர்த்தும் இயற்கை பற்றிய கருத்துகளை எழுதுக.

இயற்கை பற்றிய தகவல்களை மக்களிடம் பல்வேறு வகையான கேள்விகளை எழுப்பி, அதற்கான பதில்களை நீங்களே சொல்லுங்கள் என்ற நிலையில் கருத்துகளை பதிவு செய்துள்ளார்.

மார்கழி மாதம் :

நில்லுங்கள்
உண்டு
இல்லை
இரண்டில் ஒன்று
சொல்லுங்கள்
மச்சும் குளிரும்
மார்கழிக் காலையில்
ஓடைநீரின் கதகதப்பில்
ஒருபொழுது குளித்ததுண்டா?
அந்தியில்
வெற்றிலை போட்ட வானத்தில்
கூட்டங்கூட்டமாய்க்
கூடு செல்லுமே பறவைகள் - அந்தப்
பறந்துபோகும் பந்தல்
பார்வையில் கரையும்வரை
இமையாத கண்ணோடு
இருந்ததுண்டா? (1)

நில்லுங்கள்! உண்டு, இல்லை இதில் இரண்டில் ஒன்று சொல்லுங்கள். மார்கழி மாதத்தின் காலைப்பொழுதில் குளிரின் மிகுதியில் ஓடையின் கதகதப்பில் எப்பொழுதேனும் குளித்தது உண்டா? மாலைப் பொழுதில் வெற்றிலை போட்டு சிவந்ததைப்போல சிவந்த வானத்தில் கூட்டம் கூட்டமாய் கூடு செல்லும் பறவைகள். அந்தப் பறந்துப் போகும் பந்தல் பார்வையில் மறையும் வரை இமைக்காத கண்ணோடு இருந்தது உண்டா?

பௌர்ணமி வெளிச்சம் :

பௌர்ணமி வெளிச்சம்
நீர்ப்பரப்பில் எழுதும்
நிலாச்சாலையில்
பொடிநடை போய்வர
புத்தி ததவித்ததுண்டா?
மஞ்சள் குளித்த மாந்தளிர்
நிறம்மாறும் நிமிடம் எதுவென்று
துப்பறிய என்றேனும்
துடித்ததுண்டா? (2)

பௌர்ணமி வெளிச்சம் நீர்ப்பரப்பில் எழுதும் நிலா வெளிச்சத்தின் சாலையில் பொடி நடையாய்ப் போய்வர புத்தி தவித்தது உண்டா? மஞ்சள்நிற மாந்தளிர் நிறம் மாறும் நிமிடம் எதுவென்று துப்பறிய என்றேனும் துடித்தது உண்டா?

தொட்டாற் சிணுங்கி :

தொட்டாற்சிணுங்கி
தொட்டு முடித்து
அது
பூப்பூவாய் விரியும்வரை
பொறுமை காத்து நின்றதுண்டா?
சுகதுக்கம் கேட்க
ஊர்போகும் போதெல்லாம்
நதிக்கரை மரங்களை
நலம் கேட்டதுண்டா? (3)

தொட்டாற்சிணுங்கி செடியயைத் தொட்டு முடித்து அது பூப்பூவாய் மலரும் வரை பொறுமை காத்து நின்றது உண்டா?. சுகதுக்கத்தை கேட்க ஊர்போகும் பொழுதெல்லாம் நதிக்கரை மரங்களை நலம் விசாரித்தது உண்டா?

ஏப்ரல் மாதம் :

ஏப்ரல் மாதத்து
இரவு ரயிலில்
ஜன்னல் ஓர இடம்பிடிக்கச்
செல்லச் சண்டையிட்டதுண்டா?
எறும்புகளின் யாத்திரையைச்
சத்தமின்றிப் பின் தொடர்ந்து
முடிவிடம் காண
முயன்றதுண்டா? (4)

ஏப்ரல் மாதத்தில் இரவுநேர இரயிலில் ஜன்னல் ஓரத்து இடத்தைப் பிடிக்கச் செல்லமாகச் சண்டை இட்டது உண்டா? எறும்புகளின் பயணத்தைச் சத்தமின்றிப் பின் தொடர்ந்து முடிவிடம் காண முயன்றது உண்டா?.

வாய்விட்டுக் கேட்டதுண்டா :

‘மழைக்குப் பிறந்தும்
நனையாமலிருக்கிறாயே’
வானவில் பார்த்து
வாய்விட்டுக் கேட்டதுண்டா?
மழைநின்றபொழுது
வான்கருணை தொழுது
மரஞ்செடிகொடி வடிக்கும்
ஆனந்தக் கண்ணீர்
அனுபவித்ததுண்டா? (5)

மழைக்குப் பிறந்தும் நனையாமல் இருக்கிறாயே என்று வானவில்லைப் பார்த்து வாய்விட்டுக் கேட்டது உண்டா? மழை நின்றபொழுது, வானத்தின் கருணை இது என்று கைதொழுது வணங்கி, மரம் செடி கொடி வடிக்கும் ஆனந்தக் கண்ணீர் அனுபவித்தது உண்டா?.

முல்லைப் பூத்தபொழுது :

வந்தால் நமக்கு
வராவிடால் சாமிக்கு
என்று நட்ட கொல்லை முல்லை
எதிர்பாராமல் பூத்தபொழுது
கூடிநின்று எல்லோரும்
குலவையிட்டதுண்டா? (6)

வந்தால் நமக்கு, வராவிட்டால் சாமிக்கு என்று நட்டு வைத்த கொல்லை புறத்தில் எதிர்ப்பாராமல் முல்லை மலர் பூத்தப்பொழுது கூடிநின்று எல்லோரும் குலவை இட்டது உண்டா?

தூங்கும் குழந்தை :

தூங்கும் குழந்தையின்
மில்லி மீட்டர் புன்னகை
பட்டாம் பூச்சியின்
உதிர்ந்த சிறகு
வெள்ளம் அறுத்த
கரையின் விலா
நதி கோபித்து
ஒதுங்கிய நுரை
இவை கண்டு நின்று

நிலைகொண்டதுண்டா?

உண்டெனில்

வாழ்வின் ருசி அறிந்தவர் நீங்கள்

இல்லையெனில்

வாக்காளர் பட்டியலுக்கே

பிறந்தவர் நீங்கள். (7)

தூங்கும் குழந்தையின் சின்ன புன்னகை, பட்டாம்பூச்சியின் உதிர்ந்த சிறகு, வெள்ளப்பெருக்கில் அறுத்த கரையின் விலாப்பகுதி, நதியிடம் கோபித்துக் கொண்டு ஒதுங்கிய நுரை இவற்றை எல்லாம் கண்டு நிலை கொண்டது உண்டா? உண்டு எனில் நீங்கள் வாழ்வின் ருசி அறிந்தவர். இல்லையெனில் நீங்கள் வாக்காளர் பட்டியலுக்கே பிறந்தவர்.

இவ்வாறாக 'ருசி' கவிதை வழி இயற்கையின் விந்தையாக கவிஞர் வைரத்து எடுத்துரைத்து உள்ளார்.

# ஐக்கூ கவிதைகள்

ஐக்கூ என்பது ஜப்பானின் குறும்பாடல் வடிவம் 5-7-5 என்ற அசைகளைக் கொண்டது. புத்தமதப் பிரிவுகளில் ஒன்றான 'ஜென்' புத்தமதம் இந்த வடிவத்தில் தம் சிந்தனைகளை வெளிப்படுத்தியது ஐக்கூவின் அரும்புநிலைப் பருவமாகும்.

அரும்பு நிலையிலிருந்து மலர்ந்து மணம் வீசிய ஐக்கூ ஐரோப்பா முதலிய நாடுகளில் தனக்கென்று ஓரிடத்தைத் தக்க வைத்துக் கொண்டது. இந்தியாவில், குறிப்பாகத் தமிழகத்தில் பாரதியார் இதனை அறிமுகப்படுத்தினார். அதன்பின், கடந்த பதினைந்து ஆண்டுகளுக்குள் ஏற்பட்ட ஐக்கூவின் வளர்ச்சி அளவிட முடியாதது.

மூன்றடி வாமனனாகிய இவ்வடிவக் கவிதை முதல் இரண்டு அடிகளில் ஒரு கருத்தையும், மூன்றாம் அடியில் முத்தாய்ப்பான கருத்தொன்றையும் காட்சிப்படுத்தி நிறைகிறது. பல்வேறு பரிமாணங்கள் அக்காட்சிக் கவிதையைப் பொலிவுடையதாக்கும். ஐக்கூ என்பது வாழ்க்கை அனுபவம், காட்சி வழியின்ஊடே பொருளை ஊகித்து உணர்த்துவது. இப்படிப் பல பெருமைகளைக் கொண்டது இக்விதை வடிவம்.

ஐக்கூவில் சொல்வதற்கு நிறைய இருக்கிறது. அதன் இழையமைதி சொல்லும் நேர்த்தியில் வெளிப்பட்டுவிட்டால், அது ஓர் இனிமை தரும் வாழ்க்கை நுகர்ச்சி. அப்படிப்பட்ட ஐக்கூதான் உள்ளத்தின் ஊற்றுகண். போகிற போக்கில் இந்த ஊற்றுக்கண் இயல்பாகச் சுரந்தாலே போதும். ஐக்கூ பிறந்துவிடும். எந்த ஒரு காட்சியையும் ஐக்கூ கிண்ணத்தில் நிரப்பி விடலாம்.

## ஐக்கூ பற்றி :

காலத்தின் தேவையை நிறைவு செய்ய வந்து காலூன்றிய கவிதை முறைமையே ஐக்கூ முறைமை. சுருக்கமும் இறுக்கமும் உறவு நெருக்கமும் கொண்டு பொருள் விரிவில் வான்பரப்பாகும் ஐக்கூ முறை இன்றைய வாழ்விற்கேற்ற, வாழ்வோடு கலந்துவிட்ட வடிவமைப்பாக உள்ளது. - டாக்டர் இளங்கம்பன்

ஐக்கூ எனும் வடிவத்தைச் சமகால அரசியல் பின்னணியோடு இணைத்துச் செயல்படும் போது கவிதை விடுதலைக்கான ஒரு ஆயுதமாகவும், புதிய புரிதலைத் தரும் கருவியாகவும், எதிர் காலத்திற்கான கவிப் பதிவாகவும் கொண்டு செல்ல முடியும். - அன்பாதவன்

ஐக்கூவை இனியாரும் ஒதுக்கியோ, மறுத்தோ, மறைத்தோ மூடி வைத்துவிட முடியாது. ஏனெனில் அது விதையைப் போலத் தமிழ் நிலத்தில் வேரூன்றி விட்டது. நீரப்பாசி என்றவர்களின் கனவைப் பொய் என மெய்ப்பித்து விட்டது. - புதுவைத் தமிழ்நெஞ்சன்

வாழ்வின் அனுபவத்தை உணர்வோடு கலந்து, வாசக மனசிலும் அந்தக் காட்சியோட்டத்தை வரைய முடிந்தால் அந்தக் கவிதை நிச்சயம் ஐக்கூவாகும். - மு. முருகேஷ்

## பெருவினா

1. ஹைகூ கவிதைகளில் குறிப்பிடப்படும் கருத்துக்களை தொகுத்துரைக்க.

மூன்று அடிகளால் ஆன ஹைகூ கவிதைகள் ஒவ்வொன்றும் தாம் சொல்ல வந்த செய்தியை தெளிவாகக் கூறுபவை ஆகும். அதன் அடிப்படையில் இக்கவிதைகளில் குறிப்பிடப்படும் கருத்துக்களை காண்போம்.

வேதங்களின் வரி :

வேதங்களின் ஒவ்வொரு வரியும்
ஏதோவொரு வேதத்தின்
ஏதோவொரு வரியில்... - எ.மு. இராசன்

வேதங்களாக கூறப்பெறுகின்ற வேதங்களின் ஒவ்வொரு வரியும் ஏதோவொரு வேதத்தின் ஏதோவொரு வரியில் உள்ளது. வேதத்தின் பெயர்கள் வேறாக இருக்கலாம். ஆனால் அவற்றில் உள்ள வரிகள் மாறித்தான் இருக்கின்றனவே தவிர வேறாக இருப்பதில்லை என்பதை கவிஞர் எ.மு.இராசன் பதிவு செய்துள்ளார்.

விடையில்லா வினா :

நீர்க்கோழி பசியா?
துள்ளும் மீனின் துடிப்பா?
விடையில்லா வினா. - புதுவை தமிழ்நெஞ்சன்

நீர்க்கோழி பசியோடு இருப்பதால் அதன் பசி தீரவேண்டும். ஆனால் அதற்கு உணவாக இருக்கும் மீனோ துள்ளித் துடிக்கிறது. தன் உயிரைக் காக்க முயலுகிறது. நாம் எந்தப் பக்கம் நியாயம் கூறமுடியும்? இரண்டு பக்கமும் நியாயம் உள்ளதே என விடை காணமுடியாத வினாவாக இது உள்ளது என்பதை கவிஞர் புதுவை தமிழ்நெஞ்சன் பதிவு செய்து உள்ளார்.

மனிதநேயம் :

குப்பைத் தொட்டியிடம்
மாந்த நேயம்
மழலை. - செந்தமிழினியன்

குப்பைத் தொட்டியிடம் மனிதநேயம் காட்டும் ஒரே நபர் குழந்தை என்பதை கவிஞர் செந்தமிழினியன் பதிவாக்கி உள்ளார்.

தானே நிமிரும் புல் :

அடர்ந்த புல்வெளி
ஆயிரக் கணக்கில் மிதியடிகள்
தானே நிமிரும் புல். - அரிமதி இளம்பரிதி

அடர்ந்த புல்வெளியை ஆயிரக்கணக்கற்றோர் மிதிக்கின்ற மிதியடிகளில், நிமிர முடியாதோ என்று நினைக்கத் தோன்றும் நிலையில் புற்கள் தானே நிமிருகின்றன என்பதை கவிஞர் அரிமதி இளம்பரிதி பதிவாக்கி உள்ளார்.

தொலைக்காட்சிச் சிறை :

கிள்ளுதலின்றி
வாடிக்கிடக்கிறது தாத்தாச்செடி
தொலைக்காட்சிச் சிறை. - உயிர்வேலி ஆலா

மனிதச் சஞ்சாரமற்று தொலைக்காட்சி என்ற சிறைக்குள் தம்மைத் தாமே அடைத்துக் கொள்கின்றனர். தாத்தா என்னும் செடி முனைப்பதற்கேற்ப கிள்ளுவதற்கு ஆள் இன்றி வாடிக் கிடக்கின்றது என்பதை கவிஞர் உயிர்வேலி ஆலா பதிவாக்கி உள்ளார்.

கிணற்று நீரில் மேகம் :

முகத்தில் முகம் பார்க்க
யார்க்குத் தான் ஆசையில்லை
கிணற்று நீரில் மேகம். - அன்பாதவன்

முகத்தில் முகம் பார்க்க எவருக்குத் தான் ஆசையில்லாது இருக்கும். கிணற்று நீரிலே வேகம் தன் முகம் பார்த்து மகிழுகின்றது என்பதை கவிஞர் அன்பாதவன் பதிவாக்கி உள்ளார்.

யோகம் வரும் கழுதை :

உழைக்காத அழுக்குகள்
ஊதாரி நம்பிக்கை
யோகம் வரும் கழுதை. - கார்முகில்

உழைக்காமல் இருக்கும் சோம்பேறிகள், ஊதாரித்தனமான நம்பிக்கைகளுடன் வாழ்க்கையைத் தொலைத்துவிட்டு யோகத்தை நம்பிக் காலம் கழிக்கின்றனர். யோகம் வரும் என்று நம்பும் கழுதைகள் இவர்கள் என்பதை கவிஞர் கார்முகில் பதிவாக்கி உள்ளார்.

புல்லாங்குழல் :

அந்தக் காட்டில்
எந்த மூங்கில்
புல்லாங்குழல்! - அமுதபாரதி

காட்டில் எத்தனையோ மூங்கில்கள் இருந்தாலும் ஒன்றுதான் புல்லாங்குழலாகிறது. எத்தனை பேர் இருந்தாலும் வாழ்க்கையில் ஒரு சிலர்தான் புகழோடு வாழ முடியும் என்பதை கவிஞர் அமுதபாரதி பதிவாக்கி உள்ளார்.

மொழி கற்போம் :

காலை நேரப்பள்ளி
பாடம் நடத்தும் பறவைகள்
மொழி கற்போமா! - அரிமதிதென்னகன்

பறவைகள் காலை நேரத்துப் பள்ளியில் பாடம் நடத்துகின்றன. நாமும் அதன் மொழியைக் கற்க அதிகாலையில் கண்விழிப்போம் என்பதை கவிஞர் அரிமதிதென்னகன் பதிவாக்கி உள்ளார்.

தொலைந்த வாழ்க்கை :

விழி மூடும் வரை
மண்ணில் சிந்தும் வேர்வை
தொலைந்த வாழ்க்கை. - புதுவை இளவெனில்

விழி மூடி இருக்கும் வரை மண்ணில் வியற்வை சிந்தி உழைப்பவர்கள் வாழ்க்கையை அனுபவிக்க முடிவது இல்லை. அதிகாரம் படைத்த செல்வந்தர்களே இனிமையான வாழ்க்கையை வாழ்கின்றனர் என்பதை கவிஞர் புதுவை இளனில் பதிவாக்கி உள்ளார்.

இவ்வாறாக ஹைகூ கவிதையில் ஒவ்வொரு கவிஞர்களும் சமுதாயத்தில் நடைபெறும் நிகழ்வுகளை எடுத்துரைத்து உள்ளனர்.